மலர்-5 இதழ்-129 1 - 15 ஜனவரி 2022 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்



ஆன்மிகமலர்
mobile app
GET IT ON Google Play

மாதமிருமுறை

e- magazine
www.aanmeegamalar.com
e- magazine

## மதுரையில் வானர வீரர்களுக்கு வீரம் கொடுத்த ராமன்

## பொங்கல் வைத்து வழிபட்டால் பேராபத்திலிருந்து காக்கும் சிவன்

காஞ்சிபுரத்தில் மட்டும் சுமார் 66000 கோயில் கள் அக்காலத்தில் இருந்தது என்று கச்சியப்ப முனிவர் அருளிய காஞ்சி புராணம் வாயிலாக அறிய முடிகிறது.

# கும்பகோணமா? காஞ்சிபுரமா? எது கோவில் நகரம்

அவை பின்வருவன:.

| | |
|---|---|
| 1. சிவன் கோயில் மட்டும் | 16000 |
| 2. அம்பிகைக்குரிய சக்தி கோயில்கள் | 5000 |
| 3. பெருமாள் கோயில் | 12000 |
| 4. பிரம்மன் கோயில் | 10700 |
| 5. அருக தேவன் கோயில் | 9700 |
| 6. புத்தேவன் கோயில் | 8000 |
| 7. கொற்றவை கோயில் | 1000 |
| 8. பைரவர் கோயில் | 1000 |
| 9. சாத்தன் கோயில் | 1000 |
| 10. முருகனுக்கு | 500 |
| 11. விநாயகருக்கு | 500 |
| 12. சூரியனுக்கு | 500 |
| 13. ஆதிஷேன் | 100 |

போன்ற கோயில்கள் அக்காலத்தில் பெருமை வாய்ந்ததாக இருந்தது என்று கச்சியப்ப முனிவர் தனது பாடலில் குறிப்பிடுகிறார்




# கலைத்துறையினர், உடல் வசீகரத்தை விரும்புபவர்களுக்கு உதவும் கந்த அலங்காரம்




இறைவனை நகை, அணிகலன்கள் போன்றவற்றை பயன் படுத்தி அலங்கரிப்பார்கள், இது கடவுள் மீது பக்தர்களுக்கு உள்ள அதீத பக்தியின் வெளிப்பாடாகும். இதிலும் குறிப்பாக முருகன், பெருமாள் போன்றவர்கள் அலங்காரப் பிரியர்கள், இவர்களை விதவிதமாக பக்தர்கள் அலங்கரிப்பார்கள்.

இதைப்போன்று வார்த்தையால் இறைவனை அலங்கரிக்கும் பாடல்களும் இந்துமதத்தில் அதிகம் உள்ளது. இதில் முருகனுக்கு பாடப்படும் "கந்த அலங்காரம்" மிக முக்கியத்துவம் வாய்ந்தது.

அலங்காரத்தால் எப்படி இறைவனை வர்ணிப்போமோ, அதே போல வார்த்தையால் வர்ணிப்பது மிகவும் சிறப்பு. இதன் உட் பொருள் மீண்டும் மெய்ஞானத்தைதான் குறிக்கிறது.

இந்த கந்தன் அலங்காரத்தை, புற வாழ்க்கைக்கு பயன் படுத்தலாம்.

புற வாழ்க்கைக்கும், மேனி அழகிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க கூடியவர்கள் அது தொடர்பான துறையிலே இருப்ப வர்கள் உடல் வசீகரமாக இருக்க நினைப்பவர்கள் அனைவரும் இந்த கந்த அலங்காரத்தை ஓதி வந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

# ஆருத்ரா தினத்தில்
## தம்பதியருக்கு அருளும் சிவன்

ராமனுக்கு ஜென்ம நட்சத்திரம் – புனர்பூசம்

பரதனுக்கு – பூசம்

லட்சுமணனுக்கு – ஆயில்யம்

கிருஷ்ணனுக்கு – ரோகிணி

முருகனுக்கு – விசாகம்.

இவையாவும் பூமியில் இறை அவதாரம் நிகழ்ந்த நட்சத்திர தினங்களாகும். அந்த வகையில் சிவனுக்கு திருவாதிரை நட்சத்திரத்தை குறிப்பிடுவார்கள்.

ஆனால் சிவன் இதுவரை மானுட பிறப்பே எடுக்காத அவதாரமாகும் அப்படி இருக்கும்போது சிவனுக்கு எப்படி ஆருத்ரா நட்சத்திரம் சிறப்பு வாய்ந்ததாக இருக்கும்.

இதற்கு புராணங்கள் விளக்கம் கூறுகிறது.

பிறவா யாக்கைப் பெற்றோன் பெரியோன்

என்று சங்க இலக்கியமான சிலப்பதிகாரம் சிவபெருமானைக் குறிக்கிறது.

சிவபெருமானின் நட்சத்திரம் திருவாதிரை ஆனதுபற்றி புராணச் செய்திகள் உள்ளன.

சேந்தனார் வீட்டுக்கு களி உண்ண நடராஜப் பெருமான் வந்த அந்த தினம், ஒரு மார்கழி மாத திருவாதிரை நாள் இதை உணர்த்தும் வகையில், இன்றும் ஆதிரை நாளில் தில்லை நடராஜப் பெருமானுக்கு களி படைக்கப்படுகிறது. இதனால் சிவபெருமானின் நட்சத்திரம் திருவாதிரை ஆனது.






### தம்பதியருக்கு அருளும் சிவன்

ஒரு காலத்தில், திரேதாயுகா என்ற பெண் பார்வதி தேவியின் தீவிர பக்தையாக இருந்தாள்.

திரேதாயுகாவுக்கு திருமணம் நடந்தது. அக்காலத்தில் திருமணமான நான்காவது நாளில் தான் சாந்தி முகூர்த்தம் நடக்கும்.

ஆனால் திருமணமான மூன்றாவது நாளி லேயே திரேதாயுகாவின் கணவன் இறந்து விட் டான்.

திரேதாயுகா அலறித்துடித்து பார்வதிதேவியே உன் பக்தையான என்னை இப்படி சோதிக்கலாமா என்று கூறி கதறி அழுதாள்.

அப்போது கயிலாயத்தில் சிவன் அருகில் அமர்ந்திருந்த பார்வதி, திரேதாயுகாவின் அலற லைக் கேட்டு அவள் கணவனுக்கு உயிர்ப் பிச்சையளிக்க சிவனை வேண்டினாள், சிவனின் கட்டளையை ஏற்ற எமன் திரேதாயுகாவின் கணவ னுக்கு மீண்டும் உயிர் கொடுத்தார்.

அதன்பின் பார்வதியும் பரமசிவனும் திரேதா யுகாவுக்கும் அவள் கணவனுக்கும் காட்சி கொடுத்து ஆசீர்வதித்தார்கள் இந்த நிகழ்ச்சி ஒரு மார்கழி மாத திருவாதிரை நட்சத்திர நாளில் நடந்தது. இதனால் ஆருத்ரா தரிசனத்தை தம்பதி சமேதரராக செய்தால் பலன் அதிகம்.

# பெருமாளாக காட்சியளித்த

# மகாபெரியவா

காஞ்சி மஹான், மஹாராஷ்டிராவில் சுற்றுப்பயணம் செய்துகொண்டிருந்த நேரம்.

ஒரு ஜமீன்தார் மஹானுக்கு சகலவிதமான உபசாரங்களையும் குறைவில்லாமல் செய்து கொடுத்துக்கொண்டிருந்தார். தனது ஊழியன் ஒருவனை பெரியவாளின் அருகிலேயே

இருந்து பார்த்துக்கொள்ளும்படி பணித்தார். அந்த இளைஞன் பெயர் பவார் என்பதாகும். பணிவிடை என்றால் அப்படி ஒரு பணிவிடை. பெரிய வாளுக்கு பரம திருப்தி. முகாமை முடித்துக்கொண்டு புறப்படும்போது ஜமீன்தாரிடம் கேட்டார்.

“இந்தப் பையனை நான் அழைத்துக்கொண்டு போகவா?”

ஜமீந்தாருக்கு மட்டற்ற மகிழ்ச்சி. தன் ஊழியன் ஒருவன்மஹா னுக்கு சேவை செய்வது என்பது எவ்வளவு பெரிய விஷயம்?

“தாராளமாக அழைத்துப் போங்கள், அவனது குடும்பத் தை நான் பார்த்துக்கொள்கிறேன், அவர்களுக்கு வேண்டிய எல்லா சௌகர்யங்களையும் நான் செய்து கொடுத்துவிடுகிறேன். அவர் குடும்பத்தைப் பற்றி கவலைப்படவே தேவையில்லை” என்றார் ஜமீன்தார்.

அன்றிலிருந்து அந்த வடநாட்டு இளைஞன் பவார் மடத்து சிப்பந்திகளில் ஒருவனானான். அடுத்த முகாம் எங்கோ ஒரு வசதியில்லாத பிரதேசத்தில்.

இரவு நேரம், மடத்து ஊழியர்கள்யாவரும் இரவு உணவை தயாரித்து உண்டு முடித்து விட்டனர். சாப்பாடு விஷயத்தில் மட்டும் யாருக் கும், எந்த விதத்திலும் குறை வைக்கக்கூடாது எனபது மஹாபெரியவாளின் கடுமையான கட்டளை.

எல்லோரும் சாப்பிட்டு முடித்தபின், உள்ளே வந்த மஹான் , ஒவ்வருவரிடமும் “சாப்பிட்டா யிற்றா?” என்கிற கேள்வியை கேட்டு பதிலை யும் பெற்றுக்கொண்டு இருந்தார். கடைசியாக வெளியே வந்தார்.

பவார் முகாமின் காவலாளியாக வெளியே நின்றுகொண்டு இருந்தான். அவனுக்குத் தமிழ் தெரியாதில்லையா?

“சாப்பாடு ஆயிற்றா?” என்று மஹான் சைகையினாலே கேட்க, “இல்லை” என்று சோகத்தோடு சைகை காட்டி னான். மடத்து நிர்வாகியை அழைத்தார்.

“நம்மை நம்பி வந்திருக்கும் இவனுக்கு






வேளா வேலைக்கு சோறு போடா வேண்டும் என்கிற எண்ணம் உங்களுக்கு ஏன் இல்லாமல் போனது? அவனாக கேட்காவிட்டாலும்

நீங்கள் சைகை மூலமாக அவனிடம் கேட்டிருக்கக் கூடாதா? நீங்கள் சாப்பிட்டுவிட்டு சாப்பாட்டுக்கடையை மூடிவிட்டீர்கள். இந்தப் பொட்டல் காட்டில் அவன் எங்கே போய் உணவைத் தேடுவான்? என்று சரமாரியாக பொரிந்து தள்ளிவிட்டார். நிர்வாகி உடனே பவாருக்கு இரவு உணவை ஏற்பாடு செய்வதாக பெரியவாளிடம் சொல்லிவிட்டுப் போனார்.

சில நிமிடங்களில் முகாமுக்கு அருகே சைக்கிளில் வந்த ஒரு நபர், முகாமில் வெளிச்சம் தெரிவதைக் கவனித்து உள்ளே வந்துவிட்டார். அவர் கையில் ஒரு சிறிய தூக்கு.

விசாரித்ததில் அருகில் இருக்கும் ஓரிடத்தில் உணவு கொண்டு போவதாகவும், வழியில் அப்படியே மஹானைப் பார்க்க வந்ததாகவும் சொல்கிறார் அவர்.

காஞ்சி மஹான் அவரிடம் கேட்கிறார் “இதோ இருக்கும் நபருக்கு, ஏதாவது சாப்பிடக் கொடுக்க முடியுமா?” ஒரு ஊழியனுக்கு கருணை வள்ளல் புதியவனிடம் விண்ணப்பம் போடுகிறார்.

“இதோ இந்தத் தூக்கில் இரவு உணவு இருக்கிறது, சாப்பிடச் சொல்லுங்கள். நான் வேறு ஏற்பாடு செய்துகொள்கிறேன்” என்று தான் கொண்டு வந்த தூக்கை அங்கேயே

வைத்துவிட்டு போய்விடுகிறார். தூக்கைத் திறந்து பார்த்தால் வட இந்தியர் சாப்பிடும் சப்பாத்தி, சப்ஜி எல்லாம் அதில் சுடச்சுட இருக்கிறது.

புன்னகையோடு பவாரை சாப்பிடச் சொல்கிறார் அந்த கருணை வள்ளல். தனக்காக யாரோ ஒரு வழிப்போக்கனிடம் உணவைப் பெற்றுத் தருகிறாரே இந்த மஹான் என்று நெகிழ்ந்து போனான் பவார்.

அதற்குப்பிறகு அந்த வழிப்போக்கன் முகாமின் பக்கமே வரவில்லை. தூக்கையும் கேட்டு வாங்கிக்கொண்டு போகவில்லை.

பவார் மடத்தில் நிரந்தர ஊழியன் ஆனபிறகு, அவனுக்கு மஹான்தான் எல்லாம். மஹான் தனது மேனாவிற்குள் சென்று உறங்கும்வரை, பவார்தான் உடனிருந்து கவனித்துக்கொள்வது வழக்கமாகிவிட்டது. பல வருடங்களுக்குப்பிறகு ஒரு தடவை பவாரின் குடும்பம் அவரைப்பார்க்க காஞ்சிக்கு வந்திருந்தார்கள். இரண்டொரு தினங்கள் மடத்தில் தங்கி காஞ்சி மஹானை ஆசைதீர தரிசனம் செய்தபிறகு, அவர்கள் திருப்பதிக்குச் சென்று வரவேண்டும் என்கிற ஆசை.

பவார் இதை மஹானிடம் சொன்னபோதுஞ் .“தாராளமாக போய்வரட்டும்” என்று உத்தரவு கொடுத்தார். அவர்களுடன் தானும் போக வேண்டும் என்று பவாருக்கு ஆசை.

ஆனால் மஹானின் உத்தரவு வேண்டும். இவனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பொறுப்புகளை யார் பார்த்துக்கொள்வார்கள்? ஒரு நாளில் குடும்பத்தோடு போய்விட்டு திரும்பி வந்துவிடலாம் என்கிற நப்பாசை. மனதில் தயங்கித் தயங்கி மஹானிடம் தனது கோரிக்கையை சமர்ப்பித்தான்.

“பாலாஜியைத்தானே பார்க்கணும், நீயும் போய்வா” என்று வாய் மொழியாக மஹான் சொல்லிவிடவே, பவாருக்கு அளவுகடந்த மகிழ்ச்சி. மஹானின் “மேனா” வை இரவில் இழுத்து மூடுவதும், காலையில் அதை முதலில் திறப்பதும் பவாரின் வேலைதான்.

அன்று காலை எல்லோரும் திருப்பதிக்குப் போக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வழக்கம்

போல் மஹானின் “மேனா”வில் திரைச்சீலையை விலக்கிவிட்டுகாலையில் ஆற்றவேண்டிய சில கடைமைகளை செய்வதற்கு பவார் தன்னை தயார் செய்துகொண்டான்.


புனிதவேல்

விடியற்காலை மஹானின்“மேனா” வின் திரையை விளக்கிப் பார்த்த பவார் அதிர்ச்சியுடன் கூட பக்திப் பரவசமானான். உள்ளே சாக்ஷாத் பாலாஜியாக மஹான் அவன்கண்களுக்கு காட்சியளித்தார்.தன் கண்களையே அவனால் நம்பமுடிய வில்லை.

“பாலாஜி இங்கேயே இருப்பது உனக்குத் தெரியாதா?” பவார் சாஷ்டாங்கமாக கீழே விழுந்து வணங்கி எழுந்தபோது மஹான் அவனைப் பார்த்து கேட்ட கேள்வி இது.

பேசமுடியாமல் இரண்டொரு நிமிடங்கள் கலவரத்தோடு நின்ற பவார் மெதுவாக மஹானை நோக்கி தன் இரு கரங்களைக் கூப்பியவாறு “நான் திருப்பதிக்கு அவர்களுடன் போகவில்லை” என்றான்.

சர்வ வல்லமை படைத்த மஹான் இங்கேயே இருக்கும்போது, நான் ஏன் வேறு இடத்திற்கு கடவுளைத் தேடித் போகவேண்டும் என்று பவார் தனக்குதானே கேள்வியை எழுப்பிகொண்டான், என்பது உண்மை.

இதே பவாருக்கு மஹான் வேறொரு தெய்வத்தின் தரிசனத்திற்கும் ஏற்பாடு செய்து கொடுத்தார். வட இந்திய முகாமின்போது நடந்த சம்பவம் இது.

இடம் கிடைக்காத பட்சத்தில் ஏதாவதொரு பகுதியில் நகரைவிட்டு சற்று தள்ளி மஹான் முகாமை அமைப்பது வழக்கம் என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட இடம்.

ஒரு நாள் மாலை யாரும் எதிர்பார்க்காத வண்ணம் மஹான் நடக்க ஆரம்பித்துவிட்டார். பவார் மட்டும் அவருக்கு வழித்துணை. வேறு யாரும் உடன் வரக்கூடாது என்று உத்தரவு.

ஒற்றையடிப்பாதை வழியாக மலையின் அடிவாரத்தை அடைந்த மஹான், சற்றே மேலே ஏறத் தொடங்கினார்.

சற்று தூரம் போனவுடன் சுற்றிலும் இருந்த செடி கொடிகளை ஒதுக்கிவிட்டுப் பார்த்தபோது அந்த மலையில் ஒரு சிறிய குகை வாயில் தெரிந்தது. ஒருவர் தாராளமாகப் போய்வரலாம்.

“உள்ளே போய் பார்த்துவிட்டு வரியா?” என்று மஹான் பவாரிடம் கேட்க, தான் கையெடுத்துக் கும்பிட்டுவிட்டு

“எனக்கு பயமாக இருக்கிறது, நான் போக வில்லை” என்று சொல்லிவிடவே, மஹான் அவனைப் பார்த்து புன்னகை செத்தபின் குகைக்குள் நுழைந்தார்.

என்னவோ ஏதோ என்று கைகளைப் பிசைந்தவாறு பவார் குகைக்கு வெளியே நின்றுகொண்டு இருந்தான். முகம், மனம் கவலையினால் நிரம்பி வழிந்தது.

சில நிமிடங்களுக்குப் பின் மஹான் சிரித்த முகத்துடன் வெளியே வந்தார். “இப்போ நீ போயிட்டு வரலாமே” என்றார். மஹா பெரியவாளே போய்விட்டு வந்தபின்னர் இனி தான் பயப்படுவது நன்றாக இருக்காது என்று பவார் குகைக்குள் போனான். உள்ளே போனபிறகு,



மாதம் இரண்டு முறை வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்


இருண்ட குகையில் திடீரென வெளிச்சம். அவன் கண் எதிரே ஒரு மேடை. மேடையில் ஆஞ்சநேயர் விஸ்வரூபத்துடன், கை கூப்பியவாறு நிஷ்டையில் இருந்தார். பவா ருக்கு கண்கள் கூசின.

தன்னையே நம்பாதவனாக, வாயுபுத்திரனை வணங்கிவிட்டு, பரவசத்தோடு வெளியே வந்து சேர்ந்தான்.

வெளியே வந்தபின் எல்லாம் வல்ல சர்வேஸ் வரனான மஹான், “பாத்துட்டியா?” என்ற கேள்வியை மட்டும் அவனிடம் கேட்டார். கை கூப்பியவாறு அவன் தலையை ஆட்டவே, இருவரும் அங்கிருந்து புறப்பட்டனர். இந்த பவார்தான் எவ்வளவு பாக்கியம் செய்தவன்!

தொகுப்பு: புனிதவேல்

தொடர்பு எண்: 9841807572

# மனதையும் உடலையும் ஒருமுகப்படுத்தும் மணி ஓசை

# பக்தியை அளக்கும் சிகண்டி மணி




கோவில் மணிகள் சாதாரண உலோகத்தில் செய்யப் படுவதில்லை. காட்மியம், ஜிங்க், லெட், காப்பர், நிக்கல், க்ரோமியம் மற்றும் மாங்கனீஸ் போன்ற பல உலோகங்களை கொண்டு செய்யப்படுபவை தான் மணிகள்.

கோவில் மணியை செய்ய ஒவ்வொரு உலோகத்தையும் சரியான அளவில் கலக்க வேண்டும். அதன் பின்னணியில் இருக்கும் விஞ்ஞானம் என்னவென்று தெரியுமா?

மணியை ஒலிக்க செய்யும் போது ஒவ்வொரு உலோகமும் ஒவ்வொரு தனித்துவமான ஒலியாய் எழுப்பும். இது உங்கள் இடது மற்றும் வலது மூளையை இணைக்க செய்யும்.

அதனால் மணி அடித்த அடுத்த தருணமே, நீண்ட நேரம் ஒலிக்கும் கூர்மையான சத்தம் எழும். இது 7 நொடிகள் வரை நீடிக்கும். மணியில் இருந்து எழும் எதிரொலி உங்கள் உடலில் உள்ள 7 குணமாதல் மையங்களையும் (சக்கரங்கள்) தொடும். அதனால் மணி ஒலித்த உடனேயே, உங்கள் மூளை சில வினாடிகளுக்கு வெறுமையாகி விடும்.




அப்போது மெய்மறதி நிலையை அடைவீர்கள். இந்த மெய்மறதி நிலையில், உங்கள் மூளை சொல்வதை வரவேற்கும் பண்பை பெறும்.

ஒரு திருக்கோயில் என்று இருந்தால் அதில் ஒவ்வொரு திசைக்கும் உரிய திக்கு தேவதைகள், சக்திகள் என்று உண்டு. அவை எல்லாம் அந்தந்த லோகத்தில் உள்ள தெய்வ மூர்த்திகளின் கட்டுப்பாட்டிற்குள் அடங்கும். உதாரணமாக, கன்னி மூலையில் உள்ள சக்திகள், தேவதைகள் கஜானன லோகக் கட்டுப்பாட்டிற்குள்வரும்.

ஆனால், ஒரு திருத்தலத்தில் உள்ள ஆலய மணியில் உறையும் தேவதைகள் அதிகார நந்தியின் நேரடி அருளாட்சியின் கீழ் அமைவதே ஆலயமணியின் சிறப்பம்சமாகும்.

இதனால்தான் கோவில்களில் பூஜையின் போது மணியோசை எழுப்பப் படுகிறது. இறை சிந்தனையுடன் மனித மனமும், மூளையும் இணைப்பதே இந்த தேவதைகளின் பணியாகும். இந்த ஓசையுடன் இறைவனை வழிபட்டு இறைவனுடன் ஐக்கியமாக அதிகார நந்தி உறுதுணையாக இருப்பார் என்பதே மணியோசையின் நோக்கமாகும்.

## மணியை வைத்து பக்தியை அளக்கும் முறை

தில்லை நடராஜசபையின் அருகில் உள்ளது சிகண்டி பூர்ணம் மணிகள். சிதம்பரத்தில் ஓசை எழுப்பும் சிகண்டி பூர்ணம் மணி, இரண்டு மணியாகத் தோற்ற மளிக்கும். என்று இந்த இரண்டு மணிகளின் ஓசையும் ஒரே மணி ஓசையாககேட்கிறதோ அன்று ஆன்மீகத்தில் முதல் பாடம் பயில தகுதி பெற்றதாகக் கணக்கில் கொள்ளலாம்.

மருத்துவர்கள் எப்படி மனிதர்களின் உடல் சூட்டை அளப்பதற்கு தெர்மாமீட்டரைப் பயன்படுத்துகின்றனரோ, அதுபோன்று மனிதர்களின் மனம் ஒரே சீராக உள்ளதா என்பதை அறிந்து கொள்ள இந்த சிகண்டி மணியை பயன்படுத்தலாம், இந்த மணி ஓசையை ஒரே ஓசையாக உள்வாங்கும் முயற்சியில் ஈடுபடும்போது மனம் அமைதியாகி ஆன்மிகத்தில் வேகம் பிறக்கும்.

சிகண்டி பூர்ணம் மணியை ஒவ்வொரு கோணத்தில் நோக்கினால் ஒவ்வொரு விதமான தத்துவத்தை வெளிப்படுத்தும் தன்மை உடையது. இந்த சிகண்டி பூர்ணம் எழுந்தருளி இருக்கும் திசை தென்கிழக்கு. அது அக்னி பகவானுக்கு உரியது.

வெப்பம், ஒளி என்ற இரண்டு இணை பிரியா அம்சங்களுடன் விளங்குவதே அக்னி. இம்மணியை அக்னி பகவானுக்கு உரிய இரு நாக்குகளாக பெரியோர்கள் வர்ணிக்கிறார்கள். வாலாட்டி, சாலாட்டி என்ற அக்னி பகவானின் இரு நாக்குகள் இந்த ஒளி, உஷ்ண தத்துவத்தை வெளிப்படுத்துகின்றன.

இவ்வாறு இறை மார்கத்தில் முன்னேறநினைக்கும் அடியார்கள் தங்கள் வாக்கில் தீயையும் தெளிவையும் பெற்றிருக்க வேண்டும் என்ற எண்ணத்தை தொடர்ந்து அளிப்பதே சிகண்டி பூர்ணமாகும்.



கீதா–ராஜன்

எந்த அளவிற்கு சிதம்பர திருத்தலத்தில் எழுந்தருளி இருக்கும் சிகண்டி பூர்ண மணி ஓசையை ஒரு மனிதன் தன் வாழ்நாளில் கேட்டு உணர்ந்து பக்தி கொள்கிறானோ அந்த அளவிற்கு அவன் என்றும் மாறா இளமையுடன் திகழ்வான் என்பது உறுதி.

– கீதாராஜன்

தொடர்பு எண்: 9444228203

6 அடி உயர கம்பீரமாக அமர்ந்த கோலத்தின் மூர்த்திதான் – பிள்ளை யார்பட்டி விநாயகர்.

இது ஒரு குடவரைக் கோவில். வலம் புரிவிநாயகர் – சதுர்த்தி விரதம் மேற்க் கொண்டு நிறைவேற்றினால் நலம் பெறலாம்.

பிரதி ஜனவரி முதல் தேதி ஆயிரக் கணக்கான பக்தர்கள் விநாயகரை தரிசிப்பது வழக்கம். தமிழகத்திலேயே உண்டியல் இல்லாத கோயில் இதுதான். ஆண்டு தோறும் விநாயகர் சதுர்த்தி அன்று மஹா கொழுக்கட்டை செய்யப் படுகிறது.

பிள்ளையார்பட்டியின் பிரதானப் பெயர் மருதம்பூர். இங்கு மூலவராக




# வடக்கு முகமாக அருள் பாலிக்கும் பிள்ளையார் பட்டி விநாயகர்

கற்பக விநாயகர் அருள் தருகிறார்.

இக்கோவில் சுமார் 1600 ஆண்டுகளுக்கு முன்பே அமைக்கபட்டு உள்ளது. குடைவரைக் கோவிலில் புகழ் பெற்ற பல்லவ மன்னர்களுக்கு முன்பே பாண்டியர்களால் அமைக்கபட்ட கோவில் கி.பி. 12ம் நூற்றாண்டின் முற்பகுதியில் செட்டிநாட்டவர் வசமானது. இன்று வரை நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் மேற்பார்வையில் கோவில் வழிபாடு நடந்து வருகிறது.

கயமுகா சூரனை கொன்ற பிள்ளையார் தனது பழியை போக்கிக் கொள்ள சிவபெருமானை நோக்கி தவம் செய்த இடம் பிள்ளையார் பட்டியாகும். இங்கு சிவபெருமானை நோக்கி தவம் செய்த வண்ணம், வடக்கு முகமாகவே பக்தர்களுக்கு விநாயகர் அருள் பாலிக்கிறார்.

கற்பக விநாயகர் தனது வலது கையில் ஒரு சிவலிங்க சின்னமும், இடது கரத்தை தனது வயிற்றை சுற்றியுள்ள கச்சையின் மீதும் வைத்துக் கொண்டும் அமர்ந்து இருக்கிறார்.

இவரது தும்பிக்கை வழஞ்சுழியாக இருக்கிறது.

மற்றொரு சிறப்பு அம்சம் இவருக்கு முப்பரிநூல் கிடையாது.

விநாயகர் சன்னதிக்கு எதிர்புறம் அமைந்துள்ள வடக்கு கோபுரவாசல் வழியாக சென்று வழிபட்ட பின்பு கிழக்கு கோபுரவாசல் வழியாக வரவேண்டும் என்பது மரபு.

விநாயகர் கோபுரத்துக்கு எதிர்புறத்தில் வெளிபிரகாரத்தின் வட திசையில் விசாலமான திருக்குளம் உள்ளது. ஒவ்வொரு சதுர்த்தியின் இரவு நேரத்தில் விநாயகர் மூசிக வாகனத்தில் எழுந்தருளி கோவில் உட்பிரகாரத்தில் வலம் வருவார்.

பிள்ளையார்பட்டியில் விநாயகர் சதுர்த்தியை ஒட்டி பத்து நாள் திருவிழா நடைபெறுகிறது. ஒன்பதாம் நாள் தேர்திருவிழா புகழ் பெற்றது. இங்கு பிள்ளையாருக்கு தனியே தேர் உள்ளது. பிள்ளையார் தேரில் இரு வடங்களில் ஒன்றை ஆண்களும், மற்றொன்றை பெண்களும் இழுத்துச் செல்வார்கள்.

நடைதிறப்பு : காலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை. தைபூச தினத்தில் மட்டும் காலை 6.00 மணிமுதல் பகல் 12.00 மணி வரை, மாலை 4.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை.

திருவிழாக்கள்

விநாயகர் சதுர்த்தி திருவிழா ஆவணி மாதம் 10 நாட்கள். ஒன்பது நாட்கள் முன்பாக காப்புக்கட்டி கொடி ஏற்றம் செய்து திருநாள் தொடங்கும். சதுர்த்தி அன்று இரவு விநாயகப் பெருமான் வெள்ளி மூஷிக வாகனத்தில் எழுந்தருளுவது விசேஷம். மிக விமர்சையாக நடக்கும் இத்திருவிழாவில் லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொள்வார்கள்.

# பொன்னம்பல அடிகளாரின் வாழ்த்துக்கள்

ஆன்மிகமலர்.காம் சார்பில் வெளியிட்ட மாதக்காலண்டரை, சிவகங்கை மாவட்டம் குன்றக்குடி மடாதிபதி தவதிரு பொன்னம்பல அடிகளார் அவர்கள் வெளியிட,

மானாமதுரை ஸ்ரீ மகாபஞ்சமுக ப்ரத்யங்கிராதேவி கோவில் ஸ்தபதி தெளிச்சாத்தநல்லூர் சண்முகம் அவர்கள் பெற்று கொண்டார்.

ஆன்மிகமலர்காம் காலண்டர் மற்றும் ஸ்வாமி. அம்மன் படங்கள் ஆன்மிக தகவல்கள் சிறப்பாக உள்ளது. ஆன்மிகமலர் காம் குழுவிற்க்கு வாழ்த்துக்கள் தெரிவித்தார்.



## வீட்டிலேயே எளிமையாக

# இறை பூஜை செய்யலாம்




இறைவனை வணங்குவது மட்டுமல்ல, பூஜை செய்ய வேண்டும் என்ற ஆசை அனைவருக்கும் இருக்கும். இறை பூஜைக்கு எந்தவித கட்டுப்பாடும், தடையும் இல்லை. யார் வேண்டுமானாலும் பூஜை செய்யலாம்.

ஆனா அனைவரும் வாழ்வாதாரத்தையும், குடும்பத்தையும் கட்டிக்காக்கவேண்டிய பொறுப்பு இருப்பதால், இக்காலத்தில் வேலை வேலை என்று தினமும் நேரத்தின் பெரும்பகுதியை செலவு செய்வதால் நமக்கு நேரம் இருக்காது.

மாற்றங்கள் அதிகமாக இருக்கும் இந்த உலகத்தில் நமக்கான கடமைகள்ஏராளம். இப்படிப் பட்ட காலகட்டத்தில் நாம் இறைவனுக்கு பூஜை செய்வது என்பது இயலாத காரியமாக இருந்தாலும், நம்மை ஸ்ருஷ்டித்த பரமாத்மாவுக்காக ஒரு 15 நிமிடமாவது ஒதுக்கி எளிய முறையில் பூஜை செய்வதும் நம் கடமை.

வீட்டிலேயே கடவுளை எளிமையாக பூஜை செய்து வழிபடலாம் அதைப் பற்றி பார்ப்போம்.

முதலில் நாம் பூஜை அறையை வாரம் இரண்டு முறை கண்டிப்பாக சுத்தம் செய்து கொள்ள வேண்டும்.

முதல் நாள் நாம் இறைவனுக்கு பூஜை செய்திருப்போம் அல்லவா....? அந்த பழைய பூக்கள், பழைய ஊதுபத்தி சாம்பல் ஆகியவற்றை முதலில் சுத்தம் செய்து மற்றவர்கள் மிதிக்காத

இடத்தில் போட வேண்டும்.

பூஜை அறையை எப்போதும் பளபளப்பாக வைத்து கொள்ள வேண்டும். பூஜை சாமான்களை ரெடியாக வைத்து கொள்ள வேண்டும்.

முதலில் விளக்கு ஏற்ற வேண்டும். அதற்கான தெரிந்த மந்திரம் கூறவும்.

சாளக்கிராம பூஜை அபிஷேகம் செய்ய வேண்டும். வசதி இல்லை என்றால் ஜலாபிஷேகம் போதும்.

கோவிலில் செய்வது போன்ற அபிஷேகம் நம் வீட்டில் தினசரி இறைவனுக்கு செய்வது என்பது சாத்தியமில்லை. அப்படி செய்ய முடியும் ஆனால் மனதில் உறுதி வைராக்கியம் வேண்டும்.

ஆகவே நம் வீட்டு பூஜை அறையில் இருக்கும் பஞ்ச பாத்திரத்தில் உள்ள நீரை பூவால் எடுத்து இறைவனின் பாதத்தில் இரண்டு சொட்டு சமர்ப்பிக்கலாம்.

உங்கள் வீட்டில் ஸ்வாமி படங்கள் அதிகமாக உள்ளது என்றால் பொதுவாக இரண்டு சொட்டு நீரை மட்டும் பாத்திரத்தில் விட்டு சமர்ப்பயாமி என்று கூறிவிட்டு அபிஷேகத்தை முடித்து விடலாம்.

இதற்காக நீங்கள் பயன்படுத்தும் நீரானது தூய்மையாக இருக்கவேண்டும்.

உங்கள் வீட்டில் பன்னீர் இருந்தால் உபயோகிக்கலாம்.

இறைவனுக்கு பூஜை செய்யும் பொருட்களில் முக்கியமான ஒன்று பூக்கள் தான். அந்ததந்த இறைவனுக்கு என்று சிறப்புகள் கொண்ட பூக்கள் உண்டு. ஆனால் அந்த பூக்களை எல்லாம் நம்மால் தினசரி வாங்க முடியாது.

நமக்கு தினசரி என்ன மலர் கிடைக்கின்றதோ அதனை வைத்து இறைவனை பூஜிக்கலாம்.

ஒருவேளை உங்கள் ஊரில் பூக்கள் கிடைக்க வில்லை என்றால் அதற்காக கவலைப்பட வேண் டாம்.

வீட்டில் அரிசி இருக்கிறது அல்லவா அதையும் கொஞ்சம் மஞ்சள்தூளையும் சேர்த்து அஷதையை புஷ்பமாக பயன்படுத்தலாம்.

ஆனால் அந்த மலர்களை நாம் இறைவனுக்கு வைக்கும் பொழுது அந்த இறைவனின் நாமத்தை கூறி பூஜை செய்வது சிறந்தது. இந்த மொழியில்தான் மந்திரம் கூற வேண்டும் என்ற பாகுபாடு கிடையாது. தெரிந்த மொழியில் இருக்கும் மந்திரத்தை, பிடித்த தெய்வத்திற்குரிய ஒரு மந்திரத்தை அல்லது காயத்ரி மந்திரத்தை மனப்பாடம் செய்து வைத்துக் கொண்டு, முதலில் விநாயகரை வணங்கி விநாயகரின் நாமத்தை கூறிய பின், பிடித்த தெய்வத்திற்குரிய காயத்திரி மந்திரத்தை 9 முறை 108 முறை என்று நேரத்திற்கு ஏற்ப கூறினால் அதீத பலன் கிடைக்கும்.

மந்திரம் என்றால் கடினமானது அல்ல. ஆனாலும் சில பேருக்கு மந்திரம் வராது. அப்படிப் பட்டவர்கள் என்ன செய்வது!

இறைவனின் பெயருக்கு முன் ஓம் என்ற பிரணவ மந்திரத்தை கூறி இறைவனை தொழு



தாலே போதும்.

உதாரணத்திற்கு, சிவனுக்குரிய மந்திரம் தெரியாவிட்டால் "ஓம் சிவாய நம" என்று சொல்லி வழிபட உங்களுக்கான பலன் நிச்சயமாக கிடைக்கும்.

அதே போன்று நாராயணனுக்குரிய மந்திரம் தெரியாவிட்டால் "ஓம் நாராயணாய நம" என்று கூறி எளிமையாக கூறி வழிபடலாம்.

இதுபோன்று பிடித்த தெய்வத்தின் பெயருக்கு முன் ஓம் என்றும், முடிவில் நம என்ற வார்த்தையையும் பயன்படுத்தி வழிபட்டாலே போதும்.

சாம்பிராணி புகை போடுவது தான் தூபம் என்பார்கள்.



இந்த தூபத்திலிருந்து வரும் புகையை நாம் செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் வீடு முழுவதும் காட்டலாம்.

உங்கள் வீட்டில் தூபம் போடுவதற்கான வசதி இல்லையென்றால், நல்ல வாசனை உள்ள ஊதுவத்தியை பயன்படுத்தி பூஜை செய்யலாம். பூஜை செய்யும் பொழுது ஊதுவத்தியாக இருந்தாலும் சரி, தூபமாக இருந்தாலும் சரி அதை வலமாகத்தான் சுற்றி பூஜை செய்ய வேண்டும்.

இப்படி பூஜை செய்யும் பொழுது கண்டிப்பாக குல தெய்வத்தை நினைத்துக் கொள்ளவேண்டும்.

நெய் தீபம் ஏற்றி அதனை நம் கைகளால் எடுத்து இறைவனை நோக்கி மூன்று முறை வலப்புறமாக சுற்ற வேண்டும்.

இப்படி நாம் செய்யும் பொழுது இறைவனை மனதார நினைத்து கொள்ள வேண்டும்.

தூபம் காட்டிய பிறகு தீபம் கட்டாயமாக காட்டப்பட வேண்டும்.

நைய்வேத்யம் என்பது நாம் சமைத்து தான் வைக்க வேண்டும் என்பது அவசியம் இல்லை. உலர் திராட்சை, கற்கண்டு, சர்க்கரை, பழ வகைகள் இவற்றுள் உங்களால் எது முடியுமோ அதனை வாங்கி வைத்து தினசரி இறைவனுக்கு நைவேத்தியம் செய்யலாம். பூஜை அறையில் படங்கள் எவ்வளவு இருக்கிறதோ அதற்கு தகுந்தாற்போல் நைவேத்யம் வைக்க வேண்டும்.

நாம் இறைவனுக்கு நைவேத்யத்தை, பூவினால் ஒரு சொட்டு தண்ணீரை எடுத்து அந்த நைவேதியத்தை மூன்று முறை சுற்றி அதற்கான மந்திரம் கூறி இறைவனுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

கற்பூர ஆரத்தி காட்டும் பழக்கம் இல்லாதவர்கள் நெய்தீப ஆரத்தி காட்டுவதுடன் பூஜையை முடித்துக் கொள்ளலாம்.

தீப ஆராதனையை நம் கைகளால் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொள்ள வேண்டும். கடைசியாக சாஷ்டாங்கமாக ஒரு நமஸ்காரம் செய்ய வேண்டும். அவ்வளவு தான், இதற்கு ஒரு 15 நிமிடங்கள் வரை ஆகலாம்.

தீபம் முழுமையாக எறிந்து முடியும் வரை நாம் அதனைப் பூர்த்தி செய்யக் கூடாது. அது தானாகவே தான் குளிர வேண்டும்.

இந்த பூஜையின் கடைசி கட்டமாக நாம் இறைவனை நினைத்துக் கொண்டு கண்களை மூடி இறைவா என்னால் முடிந்த அளவு உனக்கு பூஜை செய்துள்ளேன் இதில் ஏதேனும் சிறு தவறுகள் இருந்தால் என்னை மன்னிக்க வேண்டும்." என்று இறைவனிடம் கேட்டுக் கொள்ளவேண்டும்.

இறைவனின் அருள் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்து கொள்வது நல்லது.

நாம் இந்த பூஜையைச் செய்வது மட்டுமல்லாமல், நம் வீட்டில் இருக்கும் குழந்தைகளுக்கும்தெய்வீக வழிபாட்டை சிறுவயதில் இருந்தே கற்றுக் கொடுக்க வேண்டும். ஏனென்றால் நம் வீட்டு பழக்கவழக்கங்களை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்வதும் நம் கடமையாகும்.

www.aanmeegamalar.com

## எந்த விதமான கட்டணமும் இல்லை

# தரத்தில் முதலிடம்

# முற்றிலும் இலவசம்




உலக அளவில் தரமான ஆன்மிக இ-புத்தகமாக வெளிவரும் **ஆன்மிக மெயில் புத்தகம்**

## இலவசமாக படிக்க

aanmeegamalar.com

aanmeegamalr app-லும் படிக்கலாம்

GET IT ON Google Play

உங்கள் இ-மெயில் முகவரியை எங்களுக்கு அனுப்பிவைத்தும் பெற்றுக்கொள்ளலாம் கீழ்கண்ட இமெயில் முகவரிக்கு உங்கள் இமெயில் முகவரியை அனுப்பிவைக்கவும்

aanmeegamalar@gmail.com

# இந்த மாத இ-காலண்டர்

AANMEEGA MALAR TRUST
Tamilnadu Government
Redg.304/2016

ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

ஆசிரியர்: சி.வி. நடராஜன்
தொலைபேசி எண்: 9444228203

அன்புடன் உலக மக்கள் அனைவரும் ஆனந்தமாக வாழவேண்டும்
S.ஆனந்தகிருஷ்ணன் & கோ மரம், ஓடு வியாபாரம் & சாமில்
சீனியப்பா குருப்ஸ்



எங்களிடம் ஒரிஜினல் (பர்மா), ஆஸ்திரேலியாவேங்கை, பர்மா தேக்கு, கேரளா தேக்கு, வெளிநாட்டு மரங்கள், வேம்பு, மருதமரம், நாவல்மரம், நல்ல கலர் உள்ள நாட்டு வாகை மரங்கள், குமிழ்மரம், ஏரோ வாகைமரம், பெரிய சுற்றளவு கலர் உள்ள மரங்கள் மற்றும் மர பினிசிங்கள் விற்பனைக்கு தயாராக உள்ளது. மொத்த மர வியாபாரிகள் அனுகவும்.





S.ஆனந்தகிருஷ்ணன்
செல்: 98424 68256



SAK மானாமதுரையில் அதி நவீன வசதிகளுடன் SAK
சீனியப்பா லாட்ஜ் A/c, SAK திருமண மஹால்
172, பைபாஸ் ரோடு, மானாமதுரை. போன்: 04574-268336



A.குணா (எ) குணசீலன்
செல்: 98428 68256

## ஜனவரி

| தேதி | பிறை | நல்ல நேரம் | சந்திராஷ்டமம் |
|---|---|---|---|
| 1 | தேய் பிறை | 7.30-8.30 A.M. 4.30-5.30 P.M. | [illegible] |
| 2 | தேய் பிறை | 7.30-8.30 A.M. 1.30-2.00 P.M. | [illegible] |
| 3 | வளர் பிறை | 9.30-10.30 A.M. 4.30-5.30 P.M. | [illegible] |
| 4 | வளர் பிறை | 7.30-8.30 A.M. 4.30-5.00 P.M. | [illegible] |
| 5 | வளர் பிறை | 9.30-10.30 A.M. 1.30-2.30 P.M. | [illegible] |
| 6 | வளர் பிறை | 10.30-11.30 A.M. | [illegible] |
| 7 | வளர் பிறை | 9.30-10.30 A.M. 4.30-5.30 P.M. | [illegible] |
| 8 | வளர் பிறை | 7.30-8.30 A.M. 4.30-5.30 P.M. | [illegible] |
| 9 | வளர் பிறை | 7.30-8.30 A.M. 3.30-4.30 P.M. | [illegible] |
| 10 | வளர் பிறை | 6.30-7.30 A.M. 4.30-5.30 P.M. | [illegible] |
| 11 | வளர் பிறை | 7.30-8.30 A.M. 4.30-5.30 P.M. | [illegible] |
| 12 | வளர் பிறை | 9.30-10.30 A.M. 4.30-5.30 P.M. | [illegible] |
| 13 | வளர் பிறை | 10.30-11.30 A.M. | [illegible] |
| 14 | வளர் பிறை | 9.30-10.30 A.M. 4.30-5.30 P.M. | [illegible] |
| 15 | வளர் பிறை | 7.30-8.30 A.M. 4.30-5.30 P.M. | [illegible] |
| 16 | வளர் பிறை | 6.00-7.00 A.M. 3.30-4.30 P.M. | [illegible] |
| 17 | வளர் பிறை | 6.30-7.30 A.M. 4.30-5.30 P.M. | [illegible] |
| 18 | தேய் பிறை | 7.30-8.30 A.M. 4.30-5.30 P.M. | [illegible] |
| 19 | தேய் பிறை | 9.30-10.30 A.M. 4.30-5.30 P.M. | [illegible] |
| 20 | தேய் பிறை | 10.30-11.30 A.M. | [illegible] |
| 21 | தேய் பிறை | 9.30-10.30 A.M. 4.30-5.00 P.M. | [illegible] |
| 22 | தேய் பிறை | 7.30-8.30 A.M. 4.30-5.00 P.M. | [illegible] |
| 23 | தேய் பிறை | 7.30-8.30 A.M. 3.30-4.30 P.M. | [illegible] |
| 24 | தேய் பிறை | 6.30-7.30 A.M. 4.30-5.00 P.M. | [illegible] |
| 25 | தேய் பிறை | 7.30-8.30 A.M. 4.30-5.30 P.M. | [illegible] |
| 26 | தேய் பிறை | 9.30-10.30 A.M. 4.30-5.30 P.M. | [illegible] |
| 27 | தேய் பிறை | 10.30-11.30 A.M. | [illegible] |
| 28 | தேய் பிறை | 9.00-10.00 A.M. 4.30-5.30 P.M. | [illegible] |
| 29 | தேய் பிறை | 7.30-8.30 A.M. 4.30-5.30 P.M. | [illegible] |
| 30 | தேய் பிறை | 7.30-8.30 A.M. 3.30-4.30 P.M. | [illegible] |
| 31 | தேய் பிறை | 9.30-10.30 A.M. 4.30-5.30 P.M. | [illegible] |

**ஜனவரி**

ஜனவரி, கிரெகொரியின் நாட்காட்டியின் முதல் மாதமாகும். தமிழ் மாதமாகிய மார்கழியின் மத்தியில் துவங்கி தை மாதத்தின் மத்தியில் முடியும். உரோமன் இதிகாசத்தில் 'துவக்கங்களின் கடவுளாக' காணப்பட்ட சானசுலானுரியசு என்ற கடவுளின் பெயரே கிரிகோரியன் நாட்காட்டியின் முதல் மாதமான ஜனவரிக்கு வழங்கப்படுகிறது.



பிள்ளையார்பட்டி அருள்மிகு கற்பக விநாயகர்

## 2022

பிலவ வருடம் மார்கழி-தை

| கிழமைகள் | | சர்வ சுதர்சன நல்ல நேரம் |
|---|---|---|
| ஞாயிறு | இராகு காலம்: 4.30-6.00 P.M.; குளிகை காலம்: 3.00-4.30 P.M.; எமகண்டம்: 12.00-1.30 P.M.; வார சூலை: மேற்கு; பரிகாரம்: வெல்லம் | 7.00 - 8.00 a.m. 11.00 a.m. - 12.00 p.m. 6.00 - 7.00 p.m. |
| திங்கள் | இராகு காலம்: 7.30-9.00 A.M.; குளிகை காலம்: 1.30-3.00 P.M.; எமகண்டம்: 10.30 A.M.-12.00 P.M.; வார சூலை: கிழக்கு; பரிகாரம்: தயிர் | 5.00 - 6.00 a.m. 1.00 - 2.00 p.m. 6.00 - 7.00 p.m. 10.00 - 11.00 p.m. |
| செவ்வாய் | இராகு காலம்: 3.00-4.30 P.M.; குளிகை காலம்: 12.00-1.30 P.M.; எமகண்டம்: 9.00-10.30 A.M.; வார சூலை: வடக்கு; பரிகாரம்: பால் | 8.00 - 9.00 a.m. 5.00 - 6.00 p.m. 7.30 - 8.00 p.m. |
| புதன் | இராகு காலம்: 12.00-1.30 P.M.; குளிகை காலம்: 10.30 A.M.-12.00 P.M.; எமகண்டம்: 7.30-9.00 A.M.; வார சூலை: வடக்கு; பரிகாரம்: பால் | 9.00 - 10.00 a.m. 2.00 - 3.00 p.m. 7.00 - 8.00 p.m. |
| வியாழன் | இராகு காலம்: 1.30-3.00 P.M.; குளிகை காலம்: 9.00-10.30 A.M.; எமகண்டம்: 6.00-7.30 A.M.; வார சூலை: தெற்கு; பரிகாரம்: தைலம் | 10.30 - 11.00 a.m. 11.00 a.m. - 12.00 p.m. 4.30 - 5.00 p.m. 11.00 p.m. - 12.00 a.m. |
| வெள்ளி | இராகு காலம்: 10.30 A.M.-12.00 P.M.; குளிகை காலம்: 7.30-9.00 A.M.; எமகண்டம்: 3.00-4.30 P.M.; வார சூலை: மேற்கு; பரிகாரம்: வெல்லம் | 6.00 - 7.00 a.m. 1.00 - 2.00 p.m. 8.00 - 9.00 p.m. |
| சனி | இராகு காலம்: 9.00-10.30 A.M.; குளிகை காலம்: 6.00-7.30 A.M.; எமகண்டம்: 1.30-3.00 P.M.; வார சூலை: கிழக்கு; பரிகாரம்: தயிர் | 7.30 - 8.00 a.m. 11.00 a.m. - 12.00 p.m. 5.00 - 6.00 p.m. 9.00 - 10.00 p.m. |

நம்பர் 1 ஆன்லைன் இதழ்



நமது புத்தகத்தின் அனைத்து இதழ்களையும் இலவசமாக படிக்க
aanmeegamalar.com (ஆன்மிகமலர்.காம்)
இணையதளத்தில் இ-புத்தகம் பகுதியில் பார்க்கவும்

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| சிவராத்திரி 30 / 17 | 31 / 18 | | | | | பிலவ வருடம் சிவராத்திரி Happy New Year 1 / மார்கழி 17 |
| 2 / 18 | 3 / 19 | திருவோண விரதம் சந்திர தரிசனம் 4 / 20 | 5 / 21 | சதுர்த்தி 6 / 22 | 7 / 23 | சஷ்டி விரதம் 8 / 24 |
| அஷ்டமி 9 / 25 | அஷ்டமி 10 / 26 | நவமி 11 / 27 | 12 / 28 | ஸ்ரீவைகுண்ட ஏகாதசி கார்த்திகை★ போகிப் பண்டிகை 13 / 29 | தை திருநாள் 14 / தை 1 | மஹா பிரதோஷம் 15 / 2 |
| 16 / 3 | 17 / 4 | 18 / 5 | 19 / 6 | 20 / 7 | சங்கடஹர சதுர்த்தி 21 / 8 | 22 / 9 |
| சஷ்டி 23 / 10 | 24 / 11 | தேய்பிறை அஷ்டமி 25 / 12 | நவமி 26 / 13 | 27 / 14 | ஏகாதசி 28 / 15 | மஹா பிரதோஷம் 29 / 16 |




# திருமணமான பெண்கள்

# நெற்றிவகுடு பொட்டு வைப்பதன் ரகசியம்

ஆண் பெண் எல்லோரும் நெற்றியில் பொட்டு வைப்பது பல்வேறு நன்மைகளை தரும்.

அதாவது இரண்டு புருவங்களுக்கு மத்தியல் நாம் உயிர் ஒட்டத்தை தூண்டும் ஆக்கினை என்னும் மையம் உள்ளது.

அதை தொட்டு தூண்டும் பொருட்டும் அங்கே உருவாகும் வெப்பதை கட்டுபடுத்தும் பொருட்டும் ஆண் பெண் எல்லோரும் அங்கே பொட்டு வைத்தால் நன்மை கிடைக்கும் என்பதால் நம் முன்னோர்களால் இந்த பழக்கம் கடைபிடிக்கப் பட்டது.

இது எல்லோரும் கடைபிடிக்கும் சம்பிர தாய முறையாகவும் இருந்தது, ஆனால் திருமணமான பெண்கள்



திருமணத்திற்கு பிறகு இரண்டாவதாக ஒரு பொட்டு வைப்பார்கள்.

அது தான் நடு நெற்றி வகுடு, இந்த இடத் தில தினமும் பெண்கள் தொட்டு, பொட்டு வைப்ப தால், அவர்களின் உடலில் அவர்களுக்கே தெரியாமல் சில மாறுதல்கள் ஏற்படுகிறது. சில சுரபிகள் தூண்டப்படுகிறது.

பெண்களுக்கு நெற்றி வகுடுவில் தினமும் தொடுவதால் அவர்களுக்கு அடி வயற்றில் பாலியல் சுரப்பி நன்கு தூண்டப்படுகிறது.

அதே போல் கர்ப்பபையும் வலு பெறுகிறது. திருமணத்திற்கு பின் பெண்களுக்கு இல்லற ஆர்வமும், கர்ப்பபை வலு பெறவேண்டும் என்பதற்காக தான் நெற்றி வகுடுவில் பொட்டு வைக்கும் முறையை நம் முன்னோர்கள் ஏற் படுத்தி வைதுள்ளனர்.

மேலும் சீமந்தம், ஐந்து அல்லது எழாவது மாதம் வளைகாப்பு வைத்து செய்யும் போது எல்லோரையும் கூப்பிட்டு நெற்றி வகுடுவில் பொட்டு வைத்து தொட்டு ஆசிர்வாதம் செய்ய சொல்கிறார்கள்.

இந்த நிகழ்வில் சுமங்கலிப் பெண்கள் கலந்து கொண்டு, கர்ப்பவதியாக இருக்கும் பெண்ணின் நெற்றி வகுடுவில் பொட்டுவைத்து ஆசிர்வாதம் செய்யும்போது, சுமங்கலிப் பெண்களின் ஆரா சக்தி மூலம் கர்ப்பவதிப் பெண்ணின் வயிற் றில் இருக்கு குழந்தைக்கு, நரம்புவழியாக புத்து ணர்ச்சிகள் தூண்டப்படும்.

இதனால் கர்ப்பப்பை வலுபெறுகிறது. கர்ப்பப்பை வலுபெற்றால் குறை பிரசவம் உண் டாகாது. நிறை மாதமாக இருக்கும் போது சுக பிரசவம் ஏற்படும்.

இந்த வகிடு பொட்டை திருமணமான பெண்கள் மட்டுமே வைக்கவேண்டும், திருமண மாகாத பெண்கள் இந்த வகிடு பொட்டை வைக் கக்கூடாது. ஆனால் இரு புருவ மத்தியில் ஆண் பெண் பேதமின்றி எல்லோரும் எல்லா நாளும் பொட்டு வைக்கலாம்.




சபரிமலை செல்லும் பக்தர்கள் அடிக்கடி கூறும் வார்த்தை கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை.

சபரிமலை செல்லும்போது பாதை முழுவதும் கரடு முரடாக இருக்கும்.

ஆனாலும் ஐயப்பனை தரிசிக்கும் எண்ணம் மனதில் இருப்பதால் அவை பெரிய தடைகளாக பக்தர்கள் பார்ப்பது கிடையாது.

"கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை" என்பதை பக்தர்கள் உச்சரித்தால் ஐயப்பன் கல்லையும் முள்ளையும் மெத்தையாக மாற்றித்தரமாட்டார்,

ஆனால் அந்த கல்லையும் முள்ளையும் மெத்தை போன்று உணரும் **வலிமையையும், மனோ தைரியத்தையும் ஐயப்பன் தருவான்.**

இதைத்தான் பூடகமாக நமது முன்னோர் கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை என்று கூறி வழிபட்டனர்.

# ஸ்ரீ ஐயப்ப பூஜை மற்றும் பாவமன சூக்தம் பாராயணம் நொய்டாவில் சிறப்பாக நடைபெற்றது




நொய்டா, செக்டார் 62, ஸ்ரீ விநாயக மற்றும் ஸ்ரீ கார்த்திகேயர் கோவிலில், டிசம்பர் 26, ஞாயிற்றுக்கிழமை, காலை ஐயப்ப பூஜை நடைபெற்றது. பரணீதரன் மற்றும் ஸ்ரீதர் ஐயர் ஆகியோரால் ஏற்பாடு செய்யப்பட்டு சிறப்பாக நடைபெற்றது. கடந்த இருபது ஆண்டுகளாக இந்நிகழ்வு நடைபெற்று வருகிறது.

காலை கணபதி பூஜையுடன் துவங்கிய நிகழ்ச்சி, விநாயகப் பெருமானுக்கும், கார்த்திகேய சுவாமிக்கும் சிறப்பு அபிஷேகமும், ஐயப்பனுக்கும் சிறப்பு அபிஷேகம் நடந்தது.

சஹஸ்ரநாமம், அஷ்டோத்திர அர்ச்சனையும் நடந்தது. விஷ்ணு சஹஸ்ரநாமம், கந்த சஷ்டி, கந்தர் அனுபூதி ஆகிய பாராயணங்களும் ஓதப்பட்டன. ஆர்.கே.வாசன் தலைமையிலான கிழக்கு டெல்லியின் வசுந்தரா என்கிளேவ் ஹம்சத்வானி பஜன் மண்டலியின் ஐயப்ப பஜனை நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

ராஜு ஐயர் அனைவரையும் வரவேற்றார்.நொய்டாவின் ஸ்டார்டம் குரூப் ஆஃப் பேங்க்வெட்ஸின் பார்ட்னர்களில் ஒருவரான ராகேஷ் குப்தா அனைத்து கலைஞர்களையும் கௌரவித்தார். இந்நிகழ்ச்சியில், வேதப் பிரச்சார் சன்ஸ்தானின் (விபிஎஸ்) புத்தாண்டு நாட்காட்டிகளை, நொய்டா, செக்டார் 62, குடியிருப்போர் நலச் சங்க கூட்டமைப்பு தலைவர் எஸ்.கே.குப்தா வெளியிடப்பட்டு, கோவில் நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு வழங்கப்பட்டது.

மகா தீபாராதனையுடன் நிகழ்ச்சி நிறைவடைந்து, பிரசாதம் வழங்கப்பட்டது. கடும் பனிக்காலத்தை பொருட்படுத்தாமல், பல்வேறு பகுதியிலிருந்தும், பக்தர்கள் பெரும்பாலானோர் பஜனை நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

டிசம்பர் 30, 2021

'ஜெய ஜெய சங்கர ஹர ஹர சங்கர' என்ற கோஷங்களுக்கு மத்தியில், 'ரிக் வேதம் பாவமன சூக்தம் பாராயணம்', ஸ்ரீ விநாயக மற்றும் ஸ்ரீ கார்த்திகேயா கோவிலில், செக்டார் 62, நொய்டாவில் நடைபெற்றது.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் 68வது சங்கராச்சாரியார் பூஜ்யஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி மஹாஸ்வாமிகள் அவர்களின் 28வது ஆராதனை மஹோத்ஸவத்தின் போது. அவரது திருவுருவப்படம் அலங்கரிக்கப்பட்டு, மகா தீபாராதனை நடைபெற்றது.

பவமான சூக்தம், தீய சக்திகளின் செயல் களையும், கடுமையான கிருமிகளின் பாதிப்பையும் போக்கும் விதத்தில் வேதங்களிலிருந்து மிகவும் சக்திவாய்ந்த மந்திரமாகக் கருதப்படுகிறது.


எஸ்.வெங்கடேசன்

இந்த மந்திரங்கள் எதிர்மறை தாக்கங்கள், வாஸ்து தோஷம், சூனியம் ஆகியவற்றை நீக்குகின் றன, மேலும் அவை இடத்தை அல்லது சுற்றுப்புறத்தை தூய்மைப் படுத்துகின்றன. மந்திரங்கள் சரியான வேத ஒலியில் தெளிவான உச்சரிப்புடன் உச்சரிக்கப்பட்டன.

– எஸ்.வெங்கடேசன், நொய்டா

தொடர்பு எண் போன்: 9811161370

# ஸ்ரீ தன்வந்திரி ஆரோக்ய பீடத்தில் 16.8 அடி கல் கருடன் பிரதிஷ்டை




தன்வந்திரி பீடத்தின் ஸ்தாபகர் மற்றும் பீடாதிபதி கயிலை ஞானகுரு டாக்டர் ஸ்ரீ முரளிதர ஸ்வாமிகள் அருளாணைப்படி, தன்வந்திரி பீடத்தில் 16.8 அடி உயரமுள்ள விஸ்வரூப அஷ்ட நாக கல் கருடன் பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது. இந்நிகழ்வு 6.2.2022, ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் 10.00 மணிக்கு நடைபெறும்.

இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜாபேட்டை, அனந்தலை மதுரா, கீழ்புதுப்பேட்டை என்னும் கிராமத்தில் 6 ஏக்கர் நிலப்பரப்பில் சைவம், வைணவம், ஸ்ரீ சாக்தம், சௌரம், கௌமாரம் மற்றும் காணாபத்யம் எனும் 6 மதங்களுக்குரிய தெய்வங்களுடன் சிவ லிங்க ரூபமாக 468 சித்தர்களும் அமைந்து ஸ்ரீ ஆரோக்ய லக்ஷ்மி சமேத தன்வந்திரி பெருமாள் அமைந்து அருள்பாளித்து பூலோக வைகுண்டமாக திகழும் ஸ்ரீ தன்வந்திரி ஆரோக்ய பீடத்தில் 88வது திருச்சன்னதியாக 16.8 அடி உயரமுள்ள விஸ்வரூப அஷ்ட நாக கல் கருடர் அமையவுள்ளார் 'ஓம் ஸ்ரீ தன்வந்திரி கருடாய நமஹ' என்ற சக்திமிக்க மந்திரத்தை பக்தர்கள் கைப்பட எழுதிய கோடிக்கணக்கான மந்திரங்களைக் கொண்டு அமைய உள்ள பெரிய திருவடி என்று அழைக்கப்படும் கருட பகவானுக்கு பாரத தேசத்தில் மிகப்பெரிய ஆலயமாக முதல் முதலில் அமையவுள்ளது.



விஸ்வரூப அஷ்டநாக கல் கருட பகவான் (5.1.2022, புதன்கிழமை நேரம் காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை) மகாபலிபுரத்திலிருந்து கரிக்கோல யாத்திரையாக கீழ்கண்டவாறு வருகை புரிந்து வழியில் பக்தர்களுக்கு ஆசி வழங்கி வாலாஜா தன்வந்திரி பீடத்திற்கு வருகை புரிய உள்ளது.

காலை 6.00 மணி – மகாபலிபுரம், காலை 8.00 மணி – திருக்கழுக் குன்றம், காலை 10.00 மணி – செங்கல்பட்டு, காலை 11.00 மணி – வாலாஜாபாத், நண்பகல் 12.30 மணி – ஸ்ரீபெரும்புதூர், பகல் 1.30 மணி – ஓச்சேரி, பகல் 2.00 மணி – காவேரிப்பாக்கம், மாலை 3.00 மணி – சுமைதாங்கி, மாலை 4.00 மணி – வாலாஜா டோல்கேட், மாலை 5.00 மணி – ஸ்ரீ தன்வந்திரி கோவில், வாலாஜாபேட்டை

## கருட பகவானின் சிறப்புகள்

பட்சி ராஜாவாக விளங்கும் கருட பகவான் திருமாலின் வாகனமாக விளங்குகிறார். இவர் காச்யபர் – கத்ரு தம்பதியினருக்கு மகனாவார். அமிர்தத்தை தேவலோகத்திலிருந்து பூமிக்கு எடுத்து வந்த பெருமை இவரை சாரும். விஷ்ணுவின் வாகனமாவதால் இவரை 'பெரிய திருவடி' என்றும் ஆஞ்சநேயரை 'சிறிய திருவடி' என்றும் கூறுவர். வாசுகி என்னும் பாம்பை பூணுலாகவும், கார்கோடகன் என்னும் பாம்பை மாலையாகவும், ஆதிசேஷனை இடது கால் நகத்திலும், பதுமம் மற்றும் மகாபதுமம் எனும் நாகர்களை காதணிகளாகவும், குளிகனை கழுத்தின் பின்புறத்திலும் அணிந்திருப்பவர் கருடன். இந்த கல் கருடபகவான் பிரதிஷ்டை செய்யப்பட்டு பக்தர்களுக்கு அனுக்கிரகம் செய்ய உள்ளார். மேலும் விவரங்களுக்கு தன்வந்திரி பீடம், வாலாஜாபேட்டை, போன் 9443330203.

– செய்தியாளர்: கீதாராஜன், போன் 9444228203

# காஷ்மீர் சைவம் தனது ஆதார நூல்களாக ஆகமங்கள் கொண்டுள்ளது

இந்து மதத்தின் உட்பிரிவுகளில் சைவ சமயம் தொன்மையானது மட்டுமல்ல ஆழமான பல கருத்துக்களையும் உள்ளடக்கியது என்பதை சென்ற அத்தியாயத்தில் சிறிது பார்த்தோம் அப்படிப் பார்க்கையில் சைவத்தில் காஷ்மீர் சைவம் என்று ஒரு பிரிவு இருப்பதையும் அறிந்து கொண்டோம். இமயச்சாரலில் தழைத்தோங்கி இருந்த காஷ்மீர சைவத்தின் முழுத்தன்மையையும் தென்பகுதி மக்களாகிய நாம் தெளிவாக அறிந்திருக்கவில்லை என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். இதற்கு காரணம் வடக்கு தெற்கு வேறுபாடா சமயாச்சாரியார்களின் உபதேசத்தில் உள்ள குறைபாடா என்பது தெளிவாகத் தெரியவில்லை. இருப்பினும் அக்குறைபாடை முடிந்தவரை களைவது நமது கடமையாகும்.


www.aanmeegamalar.com

**கடவுள் உருவாக்கிய மதம்**

சரித்திர ஆய்வாளர்களால் கி.பி. 5ம் நூற்றாண்டில் வாழ்ந்த வராக கருதப்படும் மகாகவி காளிதாஸ் தனது ரகுவம்ச காவியத்தில் காஷ்மீர் சந்தனத்தையும் தாமிரபரணி முத்துக்களையும் சிந்து நதியோர அழகிய மணல் திட்டுக்களையும் இமயமலையில் வளர்ந்து வான் தொட முயற்சிக்கும் தேவதாரு மரங்களையும் இன்னும் பல பாரத நாட்டின் இயற்கை எழிலையும் கவிச்சுவை சொட்ட சொட்ட பாடி உள்ளார். இவரும் காஷ்மீர் பகுதி யை பிறப்பிடமாக கொண்டவர் பல காஷ்மீர் கவிஞர் கள் வடமொழியில் அறிவுச் செறிவும் கற்பனை வளமும் காவிய நளினமும் கொண்ட பல இலக்கியங்கள் படைத்துள்ளார்கள் இவர்களில் “பௌமகன்” என்ற கவிஞர் எழுதிய “ராவாணாச்சுனீயம்” என்ற நூலும் “பில்ஹனன்” எழுதிய விக்ரமாங்க தேவ சதம் எனும் காப்பியமும் “ஆனந்தவர்த்தனன்” எழுதிய “துணியாலோகம்” எனும் காவி யமும் மிகவும் புகழ் பெற்றது ஆகும்.

இப்படி இலக்கியத்தில் ஏற்றம் மிக பெற்றிருந்த




காஷ்மீர் சைவ நெறியிலும் தழைத்தோங்கி இருந்தது. இன்று துப்பாக்கிகளின் ஓசை கேட்கும் மலை முகடுகளிலும் சரிவுகளிலும் ஒரு காலத்தில் சிவ நாமமே எங்கும் ஒலித்து அந்த ஒலியில் காஷ்மீர் மக்கள் மட்டுமல்ல இந்தியாவின் வட பகுதி மக்கள் பெரும்பாலானவர்கள் அமைதியாகவும் ஆனந்தமாகவும் வாழ்ந்தனர். காலம் செய்த கோலம் சிவபெருமாளின் தவத்தை வேறுவிதமான கோஷங்கள் கலைத்ததத்தினால் தான் இன்று பீரங்கிச் சத்தங்கள் மக்களின் காதுகளை மட்டுமல்ல இதயத்தையும் பிளக்கிறதோ என்னவோ.

காஷ்மீர் சைவம் என்பது இந்தியாவில் உள்ள மற்ற சைவப்பிரிவுகளில் இருந்து முற்றிலுமாக மாறுபட்டது என்று சொல்ல இயலாது என்றாலும் கூட அதில் பல சிறப்பு அம்சங்கள் மற்றவற்றை விட தனித்துவம் பெற்று மிளிர்கிறது என்பதை மறுக்க இயலாது. கிறிஸ்துவ சகாப்தத்தின் தொடக்கம் முதல் கி.பி. 9ம் நூற்றாண்டு வரை காஷ்மீர் மற்றும் அதை ஒட்டி உள்ள காந்தாரம் தற்போதைய ஆப்கானிஸ்தான் ஆகிய பகுதிகளில் மஹாயான புத்த சமயமே ஆட்சியில் இருந்தது எனலாம் அதன்பிறகு ஏற்பட்ட அரசியல் மற்றும் ஆன்மீக விழிப்புணர்வால் சிவவழிபாட்டின் ராஜ தானியாக காஷ்மீரம் விளங்கியது.

தென்னாட்டு சைவ நெறிக்கு ஆகமங்கள் எப்படி மூல நூல்களாக இருக்கிறதோ அதே போன்றுதான் காஷ்மீர் சைவமும் தனது ஆதார நூல்களாக ஆகமங்கள் கொண்டுள்ளது.

"பகீகண்டருத்ரன்" என்ற சிவபெருமான் ஆகமங்களை துர்வாசகர்க்கும் அம்முனிவர் தனது புத்திரர்களான த்யம்பகர், அமர்தகர், ஸ்ரீகண்டர் ஆகிய முனி சிரேஷ்டர்களுக்கு உப தேசம் செய்ததாக மரபுவழியில் நம்பப்படுகிறது. சுவச்சந்தம், மிருகேந்திரம், மாதங்க நேத்திரம், சுயாம்புவம், மாலினி விஜயம், ருத்ரயாமலம், விஞ் ஞான பைரவம் ஆகிய ஆகமங்கள் இச்சைவ நெறிக்கு ஊற்றுக்கண்களாக விளங்குகிறது.

இவை மட்டுமல்ல ஆகமங்கள் அனைத்தி லும் உள்ள கருத்துக்களை தனக்குள் கொண்ட "வசுபுத்தர்" என்ற மஹா ஞானி உபதேசித்த "சிவசூத்திரம்" என்ற நூலும் காஷ்மீர் சைவ கோபுரத்தின் மணி விளக்காக திகழ்கிறது. வசுபுத்தர் என்ற ஞான புருஷன் திருமூலர்க்கு 300 ஆண்டுகளுக்கு பிறகு வாழ்ந்தவர் என்று கருதப் படுகிறார். வரலாற்று முறைப்படியும் ஆன்மிக சம்பிரதாயத்தின் படியும் வசுபுத்தரே காஷ்மீர் சைவ நெறியின் முதல் ஆசிரியர் என்று கருதப்படுகிறார். இவர் சிவசூத்திரம் மட்டுமல்லாது ஸ்பண்டகாகை என்ற வேறு ஒரு நூலும் எழுதி உள்ளார் இதற்கு பலர் உரை எழுதி இருக்கிறார்கள்.

அந்த உரைகளில் "ராமசுந்தரர்" என்பவரை விவரித்து உரையும் "உள்பல வைணவன்" "சேமராஜன்" "ஸ்பண்டசந்தகம்" "ஸ்பண்டநிர்ணயம்" ஆகிய விளக்க உரைகள் குறிப்பிடத்தக்கது ஆகும்.

காஷ்மீர் சைவத்திற்கு திகாசாஸ்திரம், திகாசா சனம் என்று வேறு இரண்டு பெயர்களும் உண்டு. இது மட்டுமல்லாது ரகசிய சம்பிரதாயம் திரயம்பக சம்பராதயம் என்ற பெயர்களும் இருந்தாலும் கூட பல நேரங்களில் இந்த மதம் திகா என்றே அழைக்கப்படுகிறது.

திகா என்ற சொல் சிவன், சக்தி, அணு ஆகிய மூன்றோ பதி, பசு, பாசம் ஆகிய வேறு மூன்றோ அல்லது சிவன், சக்தி, நரன் ஆகிய மூன்றோ குறிப்பிடுவதாக சொல்லப்படுகிறது. ஆனாலும் வேறு ஒரு சாரார் பேதம், அபேதம், பேதா பேதம் ஆகிய மூன்றை குறிப்பதே திகா என்ற வார்த் தையின் உண்மைப்பொருள் என்கிறார்கள்.

இது தவிர ஸ்பண்ட்ட நெறி, பிரதிய பிஞ்ஞா நெறி என்று இரு பெரும் உட்பிரிவும்காஷ்மீர் சைவத்தில் உள்ளது ஸ்பண்ட என்ற சொல் சிவபெருமானின் செயல்களால் ஏற்படும் அதிர்வை குறிப்பதாக சொல்கிறார்கள் வசுபுத்தர் இந்த சொல் லிற்கு மனோ தத்துவ அடிப்படையில் விளக்கம் தருகிறார் கோபம் இன்பம் ஆகிய உணர்ச்சிகளின் வெளிப்பாடாக ஏற்படும் ஆற்றல் துடிப்பு அதிர்வு ஆகியவைகளே ஸ்பண்ட்ட என்ற வார்த்தையில் உள்ள கருத்துக்களாகும் என அவர் கூறுவது கவனிக்கத் தக்கதாகும்.

மேலும் மூலாதாரத்தில் அடங்கி இருக்கும் குண்டலினி சக்தியை ஸ்பண்ட்ட என்ற சொல் சுட்டுவதாகவும் அவரே கூறுகிறார்.

யோக மார்க்கங்களான தியானம், ப்ரணாயமம் ஆகிய கருவிகள் துணையாக கொண்டுஸ்வாதிஷ்ட் டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆஞ்ஞை முதலிய ஆதாரங்கள் வழியாகஸ்பண்ட்ட என்ற குண்டலினியை தட்டி எழுப்பி பிரம்ம ரத்தினமாகிய சகஸ்ரத்தில் இணைத்ததை இச் சொல் என ஆழமான முறையில் குறிப்பிடுகிறார் இப்படி

குண்டலினி சக்தியை எழுப்பி சிவத்தை அடைவதே ஸ்பண்ட்ட கோட்பாட்டின் முக்கியமான குறிக்கோளாகும்.

தமிழகத்தில் உள்ள சித்தர்களின் சித்தாந்தமும் இதே கோட்பாட்டை குறிப்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

இறை ஐக்கிய நெறி என்பது நமது நாட்டைப் பொருத்தவரை பலவிதமான வார்த்தைகளில் சொல்லப்பட்டு இருந்தாலும் அடிப்படையில் எல்லாமே ஒன்றுதான் என்பது நமக்கு நன்கு விளங்குகிறது.


யோகி ஸ்ரீ ராமானந்த குரு

ஸ்பண்ட்ட சித்தாந்தத்தின்படி சர்வ சுதந்திரம் உடைய பதியாகிய சிவன் தனது சுய சங்கல்பத்தால் தன்னிலிருந்து உலகினை உருவாக்கி தன் சார்பில் வேறாகத் தோன்றும்படி படைக்கிறான். அதாவது கண்ணாடியில் முகங்கள் வீடுகள் மரங்கள் கியவைகள் தெரிந்தாலும் கண்ணாடி அவற்றோடு எந்த உறவும் ஒட்டுதலும் இல்லாமல் தனித்து இருக்கிறதோ அதே போன்று சிவன் தனக்குள் எல்லாவற்றையும் கொண்டு இருந்தாலும் அவற்றிலிருந்து எல்லாம் எந்த பாதிப்பையும் அடையாமல் தனித்தன்மையோடு விளங்குகிறான்.

அதே நேரம் உயிர்கள் என்பது முழுவதும் சிவத்தன்மை உடையது ஆகும் ஆணவம், மாயை, மாயேயம், கர்மம் ஆகிய கட்டுக்களால்தனது சுய சிவத்தன்மையை உண ராமல் அறியாமையில் மூழ்கிக்கிடக்கின்றன.

அறியாமை என்பது உயிர்களிடத்தில் இல்லாமல்முற்றிலும் அழிந்துவிட்டால் ஜீவ ஈசுவர ஐக்கியம் ஏற்பட்டு விடும் இந்த ஐக்கியம் ஏற்பட ஜீவன்கள் ஒவ்வொன்றும் தியான வழியாகவும், யோக வழியாகவும் அயராது பாடுபட வேண்டும் ஆழ்ந்த தியானத்தாலும் கடினமான யோகாப்பியாசத்தாலும் உயிர்களை பற்றி உள்ள மும்மல கட்டுக்கள் உடைந்து பரிபூரண ஞானம் கைவரப்பெற்று பரமாத்மாவும் தானும் ஒன்றே என்ற அத்வைத உணர்ச்சி ஏற்பட்டு முக்திக்கு வித்திடும் என்பது ஸ்பண்ட்ட நெறியின் மையக் கோட்பாடாகும்.




காஷ்மீர் சைவத்தின் இன்னொரு பிரிவான "ப்ரதிய பிஞ்ஞான" என்ற சித்தாந்தத்தை பார்ப்போம். ப்ரதியபிஞ் ஞான என்ற வார்த்தைக்கு தமிழில் நேரான பொருள் கொண்டால் அறிந்து கொள்ளுதல் நினைவு கூறுதல் என்று பொருள் வரும். வசுகுப்தரின் நேரடிச்சீடரான சோமானந்தர் என்பவர் எழுதிய "சிவதிருஷ்டி" என்ற நூலில் இச்சித்தாந்தத்தின் கொள்கைகள் விரிவாக கூறப்பட்டு உள்ளது.

சோமானந்தர் சொல்கிறார் சிவன்.ஜெகத், நான் ஆகிய மூன்றும் ஒன்றே தான் வேறு வேறானது அல்ல என்பதை அனுபவ பூர்வமாக உணர்ந்து கொண்டவன் பந்த பாசக்கட்டுகளில் இருந்து முழுமையாக விடுதலை அடைகிறான் என்ற அவரின் கருத்து ஆன்மீக வாழ்வின் இறுதி வடிவாகும் என்பதை மாற்றுக் கருத்து கிடையாது. சிவனும் தானும் ஒன்றென உணர்ந்த பிறகு அறிந்து கொள்வதற்கு உலகில் வேறு என்ன இருக்கிறது. முதலில் நானும் சிவனும் ஒன்றுதான் என்பதை நம்புவதற்கு என்ன வழி இருக்கிறது அந்த வழி தெரிந்தால் தானே சிவனை அறிய முயற்சி செய்யலாம். என்ற கேள்விகளுக்கு எல்லாம் ப்ரதிபிஞ் ஞா நெறி விளக்கமான விடைத் தருகிறது.

ஒரு இளம் பெண் இருக்கிறாள் அவள் தனது தோழியின் மூலமாக ஒரு அழகிய வாலிபனைப் பற்றி அறிகிறாள். அந்த இளைஞனின் சுருள் சுருளான கேசம் மூன்றாம் பிறை போன்ற நெற்றி மங்கையரின் மனதை துளைத்து எடுக்கும் வீரத்திருப் பார்வை முருக்கி விட்ட மீசை தினவெடுத்து நிற்கும் கம்பீரமான தோள்கள் அகன்று விரிந்து திண்மையுடன் திகழும் மார்பு இன்னும் அவனின் பல்வேறு விதமான சௌந்தர்யங்களைப் பற்றியும் அறிவு விசாலத்தைப் பற்றியும் அறிந்து கண்ணால் காணாமலேயே அவனிடம் காதல் வசப்படுகிறாள்.




பார்க்காமலே பிறந்த பாசம் முழுமையான பரவசத்தை தருமா? தராது அல்லவா வார்த்தைகளில் வர்ணனை செய்யப்பட்ட வாலிபனை நேரில் கண்டு மனமார பேசி நெஞ்சார தழுவி கொண்டால் தானே உடல் இன்பம் என்பது முழுமை பெறும் அதே போன்று தான் உயிர்களும் தன்னுள் தலைவனாக இருக்கின்ற சிவபெருமானை கண்ணாரக் கண்டு வாயாரப்பாடி பரவி மெய்யார திருவடிகளில் வீழ்ந்து இன்புற்றால் தானே வாழ்க்கை முழுமை அடையும்.

காதல் செய்தி சொல்ல தோழி தேவை காலகாலனாக நிற்கும் நீலகண்டனின் அருள் விசாலத்தைச் சொல்ல குரு மொழி தேவை குருமொழியை கேட்டு அதை அனுபவப்படுத்தி பார்பவன் எவனோ அவனே பிறவிப் பெருங்கடலை நீந்திக் கடந்து ஜீவன் முக்தனாகுகிறான்.

இப்படி ஜீவன் முக்தன் ஆவதற்கு ஒவ்வொரு மனிதனும் சதா சர்வகாலமும் சிந்தையை சிவன் பால்வைத்து செயலையும் சிவச்செயலாகவே செய்யப்பட வேண்டுமென்று வற்புறுத்திகிறது காஷ்மீர் சைவத்தின் ப்ரதியாஞ்ஞா நெறி.

இதைப்பற்றி அபிநவபுத்தர் என்ற ஞானி தரும் விளக்கத்தை பார்ப்போம். தொன்றுதொட்டு சொல்லப்பட்டு வரும் கதைகளினாலும் அருளமுதை தாரை தாரையாக பொழியும் கவிதைகளாலும் அறிவை விசாலப்படுத்தும் தத்துவக் கோட்பாடுகளினாலும் தலைவனான சிவபெருமானின் சர்வவல்லமை அறியப்படுகிறது.

அப்படி அறிந்தவற்றை தைல தாரையாக சிந்தித்துக் கொண்டு தியானத்தில் ஈடுபடும் போது அருட்பெரும் ஜோதியான சிவதரிசனம் கிடைக்கப்பெற்று ஒவ்வொரு ஜீவனும் பசுபதியின் வடிவங்களே இல்லை இல்லை எல்லாமே பசுபதியே தான் என்ற உண்மை ஞானம் பிறக்கிறது.

இதை காஷ்மீர் சைவம் இன்னும் பலப்பல உதாரணங்களைக் காட்டி நம்மை சர்வேஸ்ரனிடம் அழைத்துச் செல்ல முயற்சிக்கிறது.


யோகி ஸ்ரீ ராமானந்த குரு

மேலும் தொடர்பு கொள்ளவும்

போன்: 09442426434



அழகிய வடிவமைப்பில்

வார இதழ்கள்,

மாத இதழ்கள்,

பப்ளிகேஷன்ஸ்

புக் ஓர்க்,

அட்டைப்பட

வடிவமைப்பு,

நாளிதழ்கள்,

போன்றவை

தரமாகவும்

குறைந்த செலவில்

செய்துதரப்படும்

Bhaanrajg Graphics

செல்: +91-8825844033




# ஆன்மிக உலகின் முதல் இலவச இணைய இதழ்

## இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் கட்டணமின்றி

aanmeegamalar.com

aanmeegamalr (app)-ல்

படித்து பயன்பெறலாம்

**சத்தான நமது பாரம்பரிய உணவிற்கு முக்கியத்துவம் தருவோம், கபசுபகுடிநீர், அசுவகந்தி, தேன் குடிநீர், இஞ்சி, மிளகு, நிலவேம்பு, போன்றவற்றை அதிகம் எடுத்துக்கொண்டு**

## கொரானாவை விரட்டுவோம்

# ஜனவரி 5 உன்னத தினம்
# குருதேவரின் பிறந்த தினம்

மனிதவாழ்வு மேம்படுவதற்காக பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்

குருதேவர் வாக்குறுதி அளித்துள்ளார்: "நீங்கள் பெறமுடிகின்ற மகத்தான காதல் இறைவனுடனான காதலாகும்.. அவனே பேரன்பன். நமது ஆன்மாக்களே அன்பிற்குரியவை. மேலும் ஆன்மாவானது பிரபஞ்ச பேரன்பனை சந்திக்கின்றபொழுது சாசுவத காதல் துவங்குகிறது."

குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தருடைய பிறப்பும் அவரது ஆன்மீக சேவையும்.

குருதேவர் தனது வாழ்க்கையை இறைவனுடனான இடையறாத காதலாகக் கொண்டிருந்த பரமஹம்ஸ யோகானந்தருடைய சொற்பொழிவுகள் அடங்கிய ஒரு நூல், இறைவனால் படைக்கப்பட்ட ஒவ்வோர் ஆன்மாவிற்குமான அவனது அன்பைப்பற்றியதும் பிறவி எடுத்துள்ள ஆன்மாக்களாகிய நாம் நம் வாழ்க்கையில் இறைவனுடைய அன்பான இருப்பை எவ்வாறு அனுபவிப்பது என்பது பற்றியும் அவர் தமது சொற்பொழிவில் கூறியுள்ளார்.

அவதார புருஷரான குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர் 1893–ம் ஆண்டு ஜனவரி மாதம் 5–ம் தேதி உத்தரப்பிரதேசத்திலுள்ள கோரக்பூரில் அவதரித்தார். அவருடைய வாழ்க்கை தெய்வீகப் பணிக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பதை அவருடைய தனிச்சிறப்பு வாய்ந்த குழந்தைப் பருவம் தெளிவாகச் சுட்டிக்காட்டியது. அவருடைய அன்னை இதை அறிந்து கொண்டு அவருடைய உயர்ந்த லட்சியங்களையும் ஆன்மீகப் பேராவல்களையும் உற்சாகப்படுத்தினார். அவர் வெறும் பதினோரு வயதாக இருந்தபோது இந்த உலகத்திலுள்ள மற்ற எல்லாவற்றையும் விட மேலாக தான் அன்பு செலுத்திய தனது அன்னையை இழந்தார். இந்த இழப்பானது இறைவனைக் காண்பதற்கும் ஒவ்வொரு மனித இதயமும் ஏங்கிக் கொண்டிருக்கும் தெய்வீக அன்பை சிருஷ்டிகர்த்தாவிடமிருந்தே நேரடியாகப் பெறுவதற்கும் அவரிடம் இயற்கையாய் அமையப்பெற்றிருந்த மன உறுதியை திடப்படுத்தியது.

1986 நவம்பர் 19 ம் நாளன்று ஸ்ரீ தயாமாதா எழுதியது.

தயாமாதா கூறுகிறார்: "அருளாசிகள் நிறைந்த அரை நூற்றாண்டிற்கும் அதற்கு மேலாகவும் பரமஹம்ஸ யோகானந்தரின் கிரியா யோக இறைப்பணியின் வளர்ச்சியில் பங்கு பெறுவதற்கும் நேரில் காண்பதற்கும் நான் பணிவுடன் பேறு பெற்றிருக்கிறேன். அவருடைய இருப்பிலிருந்து பெருகியெழுந்து என் இதயத்தைப் பற்றிக்கொண்ட இறைவனுக்கான அன்புத் தீக்கொழுந்தானது, அதனுடைய உருமாற்றும் ஒளியின் அருளாசியை வழங்கியவண்ணம் எண்ணற்ற மற்ற இதயங்களில் அவ்வாறே தெய்வீக அன்பைத் தூண்டுவதை நான் கண்டிருக்கிறேன். நீண்ட காலமாக, எதிர்பார்த்திருந்த 'மனிதனின் நிரந்தரத் தேடல்' – ன் தொடர்ச்சியாக ' தெய்வீகக் காதலாக ஆழ்ந்த மனநிறைவுடனும் ஆனந்தத்துடனும் யோகதா சத்சங்க சொஸைடி ஆஃப் இந்தியா/ செல்ஃப் – ரியலைசேஷன் ஃபெலோஷிப் வழங்குகிறது."

மேலும் மாதாஜி தொடர்கிறார்: "இறைவனுடனான காதல் பரிபூர்ணமானது. என்றும் நீடித்திருப்பது", என்று குருதேவர் ஒரு முறை கூறினார். பரமஹம்ஸரிடத்தில் இறைவனுடனான நிரந்தர உறவின் மகிமையும் இனிமையும் முழுவதுமாக வெளிப்படுத்தப்பட்டது. அவருடைய உதாரணத்தைப் பின்பற்றுவதற்கு பெருமுயற்சி எடுத்த இந்த வருடங்கள் ஸ்ரீ அவர் போதித்த லட்சியங்களின்படி வாழ்தல் மற்றும் போதனைகளைப் பயிற்சி செய்தல் – என் இதயத்தின் ஒவ்வோர் ஏக்கத்திற்கும் ஒரு விடையைக் கொணர்ந்தன. என் ஆன்மாவினூடே பரவிய இறை அன்பின் அந்த முதல் சிலிர்ப்பைப் பற்றிய வாக்குறுதி சாத்தியமாகக்கூடிய எல்லா எதிர்பார்ப்புகளுக்கும் மேம்பட்டு பூர்த்தி செய்யப்பட்டது."

தயாமாதாஜி தொடர்கிறார்: "பரமஹம்ஸருடைய ஒரு விருப்பம் இறைவனை தங்களுடைய வாழ்வின் ஓர் உணர்வு பூர்வமான உண்மையாக அனுபவிப்பதற்கு

121
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு
மேம்படுவதற்காக

மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதே. தனது ஆன்மாவின் ஆழங்களிலிருந்து இறைவனிடம் பிரார்த்தனை செய்தவண்ணம் இறைவனின் எல்லாக் குழந்தைகளுக்காகவும் அடிக்கடி கருணை நிறைந்த கண்ணீர்விட்டு துக்கப்படுவார், “ உன் அன்பை அனைத்து இதயங்களிலும் எழுச்சிபெறச் செய்ய வல்லவன் ஆவேனாக.” இறை அன்பே ஒரே பதில் – ஒரே ஒரு பதில் – ஒவ்வோர் இதயத்திலிருந்தும் வெறுமையின் வலியை நிரந்தரமாக அகற்றி, இறைவனால் படைக்கப்பட்ட இந்த அழகிய உலகத்தின் அமைதியையும் ஒற்றுமையையும் துண்டிக்கின்ற பிரிவினை, வெறுப்பு, புரிதலின்மை ஆகிய புண்களை சுட்டு குணப்படுத்தக்கூடியது. பரமஹம்ஸருடைய ஆர்வமிகுந்த பிரார்த்தனையை நிறைவேற்றுவதற்கு இப்புத்தகத்தின் பக்கங்களிலிருந்து அந்த தெய்வீக அன்பின் தீச்சுடரானது. அது தொடுகின்ற ஒவ்வோர் இதயத்திலும் இறை அன்பை விழித்தெழச் செய்தவண்ணம் சென்றடையட்டும்!”

பரமஹம்ஸ யோகானந்தரைப்பற்றி யோகதா சத் சங்க சொஸைடி ஆஃப் இந்தியா/ஸெல்ஃப் – ரியலைசேஷன் ஃபெலோஷிப் ஆகிய இரு நிறுவனங்களும் தங்களுடைய கருத்தை இவ்வாறு கூறியுள்ளன.

“யோகானந்தர் விரைவில் தன்னுடைய பிறப்பிலிருந்தே பிணைக்கப்பட்டிருந்த வரான, மகோன்தை குருபரம்பரையில் வந்த ஒருவருடைய சீடரானார். அவர்தான் தலைசிறந்த ஞானாவதாரமான ஸ்வாமி ஸ்ரீ ஸ்ரீ யுக்தேஸ்வர் கிரி. ஸ்ரீ யோகானந்தரின் பெற்றோர்கள் ஸ்ரீ யுக்தேஸ்வரரின் குருவாகிய ஸ்ரீ ஸ்ரீ லாஹிரி மகாசயரின் சீடர்களாவர். பரமஹம்ஸர் தனது அன்னையின் கரங்களில் சிறு குழந்தையாக இருந்தபொழுது லாஹிரி மகாசயர் அவரை ஆசீர்வதித்து தீர்க்கதரிசனம் மொழிந்தார். “இளந்தாயே, உன் மகன் ஒரு யோகியாவான். ஓர் ஆன்மீக எஞ்ஜினைப் போன்று, அவன் அனேக ஆன்மாக்களை இறைவனின் சாம்ராஜியத்திற்குக்கொண்டுசெல்வான்.” லாஹிரி மகாசயர் புராதன கிரியா யோக விஞ் ஞானத்திற்கு இந்த யுகத்தில் புத்துயிர் அளித்த மரணமற்ற மகானாகிய ஸ்ரீ ஸ்ரீ மகாவதார பாபாஜியின் சீடராவார். பகவத் கீதையில் பகவான் கிருஷ்ணனாலும் யோக சூத்திரங்களில் பதஞ் சலியாலும் புகழப்பட்டுள்ள கிரியாயோகம், தியானத்திற்கான அறிவெல்லைக்கப்பாற்பட்ட உத்தியும் ஆன்மாவை இறைவனுடன் ஒன்றிணைப்பதற்கு அழைத்துச்செல்லும் வாழ்க்கைக் கலையும் ஆகும். புனிதமான கிரியாவை மகாவதார பாபாஜி, லாஹிரி மகாசயருக்கு வெளிப்படுத்தினார். லாஹிரிமகாசயர் அதை ஸ்ரீ யுக்தேஸ்வருக்கு கொடுத்தருளினார். அவர் அதை பரமஹம்ஸ யோகானந்தருக்குக் கற்பித்தார்.”

1930 ரூ ன் பிற்பகுதியில் பரமஹம்ஸர் தேசம் நெடுகிலும் ஆற்றிவந்த பொது சொற்பொழிகளிலிருந்து படிப்படியாக விலகிக்கொள்ளத் துவங்கினார். “எனக்குக் கூட்டங்களில் ஆர்வமில்லை,” என அவர் கூறினார். “ஆனால் இறைவனை அறிய மிக்க ஆவலுள்ள ஆன்மாக்களிடம்தான் எனக்கு ஆர்வம்”. அதன் பிறகு அவர் தன் முயற்சிகளை இறைவனைத் தேடுவதில் ஆழ்ந்து கருத்தூன்றிய மாணவர்களுக்கான வகுப்புகளின் மீது ஒருமுகப்படுத்தினார். அத்துடன் பெரும்பாலும் அவரது சொந்த ஸெல்ஃப் – ரியலைசேஷன் ஃபெலோஷிப் ஆலயங்களிலும் சர்வதேச தலைமை யகங்களிலும் உரையாற்றினார்.”



www.aanmeegamalar.com

“குருதேவர் பரமஹம்ஸர் யோகானந்தர் அடிக்கடி இந்த தீர்க்க தரிசனத்தைக் கூறியிருக்கிறார்: “ நான் படுக்கையில் அல்ல; ஆனால் பணி செய்து கொண்டு இறைவனையும் இந்தியாவைப் பற்றியும் பேசிக்கொண்டு உடலைத் துறப்பேன். 1952 மார்ச் 7 அன்று அவருடைய தீர்க்க தரிசனம் நிறைவேறியது. இந்திய தூதுவரான பினய் ஆர். சென் – ஐ கௌரவிப்பதற்காக அளிக்கப்பட்ட விருந்துபசாரத்தில் பரமஹம்ஸ யோகானந்தர் ஒரு விருந்தாளி

– சொற்பொழிவாளர்.

அவர் ஆன்மாவை தட்டி எழுப்பக்கூடிய உரையாற்றி, தான் எழுதிய 'என் இந்தியா' என்ற கவிதையிலிருந்து, இந்த வார்த்தைகளுடன் நிறைவு செய்தார். " எங்கே கங்கையும் கானகங்களும் இமாலய குகைகளும் மனிதர் களும் இறைவனைக் கனவு காண்கின்றனரோ. அந்தப் பூமியைத் தொட்டது என் தேகம்; நான் புனிதனானேன்". பிறகு அவர் தன் கண்களை மேல்நோக்கி உயர்த்தி, மகாசமாதி – ஒரு முன்னேற்றமடைந்த யோகி சுயஉணர்வுடன் பூவுலகை விட்டு நீங்குதல் – எய்தினார். அவர் இறைவனைக்காண அனைவரையும் ஆர்வமாகத் தூண்டி தான் வாழ்ந்தது போலவே மறைந்தார்."



குருப்ரியா

"அனைத்து மதங்களுக்கும் அனைத்து உயிர்களுக்கும் அடிப்படையாயுள்ள ஒரே மெய்பொருளிடம் எல்லா இடங்களிலும் உள்ள ஆன்மாக்களை விழிப்புறச் செய்வதற்கான இந்த மகாகுருவின் முயற்சிகளும் கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடையேயான மிக உயர்ந்த இணக்கத்திற்கும் புரிதலுக்குமான நோக்கத்தை மேம்படுத்துவதற்கு அவருடைய தனிச்சிறப்பான பங்களிப்பும் இந்திய அரசாங்கத்தால் 1977–ம் வருடம் அவர் மறைந்து 25–ம் ஆண்டு நிறைவுற்ற மார்ச் 7–ம் நாள் முறையான அங்கீகாரம் அளிக்கப்பட்டன. அந்த நாளன்று இந்தியா அவரை கௌரவிக்கும்வண்ணம் குருதேவருக்கு இந்தச் சொற்களில் புகழாரத்தைச்சூட்டி ஒரு நினைவுத்தபாலை வெளியிட்டது. பரமஹம்ஸ யோகானந்தரின் வாழ்க்கையில் இறை அன்பு மற்றும் மனிதகுல சேவை ஆகிய குறிக்கோள் பரிபூர்ணமாக வெளிப்பட்டது. தன் வாழ்க்கையில் பெரும் பகுதியை அவர் இந்தியாவிற்கு வெளியே கழித்தாலும் அவர் நம் மாபெரும் மகான்களின் மத்தியில் இடம் பெறுகிறார். அனைத்து மக்களையும் ஆன்மயாத்திரை மார்க்கத்திற்கு ஈர்த்தவாறு அவருடைய திருப்பணி என்றும் குறைவின்றி ஒளிமயமாகத் தொடர்ந்து வளர்கிறது".

"பரமஹம்ஸருடன் தனிப்பட்ட முறையில் தொடர்பு கொண்டிருந்த அனைவரும் அவருடைய மேன்மை, அவரது போதனைகளின் ஆழ்ந்த ஞானத்தில் மட்டுமல்லாமல் அவருடைய இருப்பிலிருந்து வெளிப்பட்ட ஆழ்ந்த அன்பிலும் கருணை நிறைந்த புரிதலிலும் அடங்கியிருந்ததை வெளிப்படையாக அறிவர். அவருடைய ஒவ்வொரு சொல்லையும் பார்வையையும் குறிப்பையும் விவரிக்கவொண்ணா ஓர் இனிமை அறிவித்தது. அத்துடன் அவரது அன்பு வரம்போ அல்லது நிபந்தனையோ இன்றி இருந்ததை எல்லோரும் ஐயமின்றி அறிந்திருந்தனர். அவருடைய பார்வையில் ஒருவருடைய பலவீனங் களோ அல்லது குறைகளோ ஒரு பொருட்டாக இல்லை என்பதும், ஒவ்வோர் ஆன்மாவிலும் இறைவனின் தூய பிரதிபலிப்பை மட்டுமே அவர் கண்டார் என்பதும் தெளிவாக இருந்தது."

"பரமஹம்ஸ யோகானந்தருடைய சொற்பொழிவுகளில் ஒன்றில் நாமே தனிப்பட்ட முறையில் இருந்து கேட்பதிலிருந்து தற்போது நாம் காலத்தினாலும் இடத்தினாலும் தடுக்கப்பட்டிருந்தாலும் அவருடைய சொற்களை வாசித்து கிரகிக்கின்ற அருளாசியை நாம் பெறமுடியும். இந்த வாய்ப்பிற்காக நாம் ஸ்ரீ தயாமாதாவிற்கு ஸெல்ஃப் ரீ ரியலைசேஷன் முன்னாள் தலைவிக்கு நன்றி செலுத்த வேண்டும். பரமஹம்ஸருடைய சேவையின் ஆரம்பகால வருடங்களில் அவருடைய சொற்பொழிவுகள் விட்டுவிட்டு மட்டுமே பதிவு செய்யப்பட்டன. ஆனால் 1931 ல் தயாமாதாஜி அவருடைய சிஷ்யையாக ஆனபோது அவர் வருங்கால சந்ததியினருக்காக தனது குருதேவரின் அனைத்து சொற்பொழிவுகளையும் வகுப்புகளையும் விசுவாசத்துடன் பதிவு செய்யும் புனிதமான பணியை மேற்கொண்டார்.

"பரமஹம்ஸருடன் நான் இருந்த அந்த ஆரம்பநாட்களில், என் சொந்த வாழ்க்கையில் அவருடைய சொற்களின் உருமாற்றக்கூடிய சக்தியை உணர்ந்ததும் எல்லா உலகிற்கும் எல்லா காலத்திற்குமாக அவருடைய சொற்களை பாதுகாக்கவேண்டிய அவசரமான தேவையைப்பற்றிய உணர்வு எனக்குள் எழுந்தது," என்று அவர் எழுதினார். இவ்வாறாக அவருடைய தொலைநோக்கி மற்றும் அர்ப்பணிக்கப்பட்ட முயற்சிகள் காரணமாகத்தான் இந்தச் சொற்பொழிவுகள் அடங்கிய நூல் 'தெய்வீகக்காதல்' முதல் பாகமாகிய 'மனிதனின் நிரந்தரத் தேடல்'ன் தொடர்ச்சியாக வெளியிடப்பட முடிகிறது."

குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தருடைய சொற்பொழிவுகள் அனைத்தும் மகத்தான மற்றும் புனிதமான நூல்கள் ஆயின. அது யாரால் என்றால் ஸ்ரீ தயாமாதாவால்தான். வருங்கால சந்ததியினருக்காக தயாமாதாஜி இந்த புனிதப்பணியைச் செய்ததற்கு ஸெல்ஃப் ரீ ரியலைசேஷன் ஃபெலோஷிப் /யோகதா சத் சங்க சொஸைடி ஆஃப் இந்தியா ஆகிய நிறுவனங்கள் மாதாஜிக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் அவருடைய பணி உயர்வானதாக ஆனது என்று இரு நிறுவனங்களும் கூறியுள்ளன. இந்த நிறுவனங்கள் மட்டுமின்றி இந்தக் கட்டுரை படிப்பவர்கள் அனைவருமே அவருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளனர்!

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி கலியபெருமாள்)
சர்பதிவாளர் (ஓய்வு) Cell No.9894595909

# வெண்பொங்கல் வைத்து வழிபட்டால்

# பேராபத்திலிருந்து காக்கும் சிவன்

சான்றோர்கள் நிறைந்த தொண்டை மண்டலத்தின் பெருமைகள் சொல்லில் அடங்காதவை!

இத்தொண்டை மண்டலத்தின் புகழ் மிகுந்தத் திருத்தலங்களையும் சொல்லி மாளாது!

தேவாரத் தலங்களோடு புராண வரலாற்றுச் சிறப்புபெற்ற தலங்களும் இங்கு அதிகமே!

அதோடு, தேவார வைப்புத் தலங்கள் கூட எண்ணிலடங்காது, வெளியில் தெரியாமல் மண்டிக் கிடக்கின்றன.

அவ்வகையில் தொண்டை மண்டலத்தின் தேவார வைப்புத் தலங்களுல் ஒன்றாக, அதி உன்னதத் திருத்தலமாகத் திகழப்பெறுகின்றது திருக் கரபுரம்.

தற்போது இப்பதி திருப்பாற்கடல் என்று அழைக்கப்பெறுகின்றது.

இராவணனின் படைத்தளபதிகளாக விளங்கிய கர தூஷணர்கள் இத்தலத்தில் தனித்தனியே சிவலிங்கங்கள் ஸ்தாபித்து வழிபட்டுள்ளனர்.

கரன் வழிபட்டதால் இத்தலம் கரபுரம் என்றும் கரபுரி என்றும் வழங்கப்பெற்றது.

புண்டரீக மகரிஷி கொண்ட சிவ விஷ்ணு பேதத்தை நீக்கும் பொருட்டு சிவபெருமான், தூஷணன் வழிபட்ட லிங்கத்தில் வேங்கடவனாக வெளிப்பட்டு, (பிரசன்னம்) பிரசன்ன வெங்கடேசப் பெருமாளாக ஆவுடையார் மீது நின்றவண்ணம் அதிசய கோலத்தில் காட்சி தருகின்றார்.

தூஷ்ணேஸ்வரர், பிரசன்ன வெங்கடாஜலபதியாக மாறி காட்சி தந்த இந்த அற்புதம் இங்கு நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

அருகில் ஸ்ரீரங்கநாதர் சயனக் கோலத்தில்



www.aanmeegamalar.com



மோ.கணேஷ்









அற்புதமாகக் காட்சியளிக்கின்றார். அரங்கநாதப் பெருமாள் சயனக் கோலத்தில் இத்தலத்தில் சேவை சாதிப்பதால் தற்போது இப்பதி திருப்பாற் கடல் என்றே அழைக்கப்படுகின்றது.

மேலும், இத்தலத்தில் கொங்கணச் சித்தர் வழிபட்ட கொங்கணேஸ்வரர் ஆலயமும், வாலி வழிபட்ட வாலீஸ்வரர் ஆலயமும், பஞ்சபாண்ட வர்கள் வழிபட்ட பஞ்சலிங்கேஸ்வரர் ஆலயமும் அமையப்பெற்றுள்ளது சிறப்புக்குறிய ஒன்றாகும்.

நீர் வளமும், நில வளமும் நிரம்பப் பெற்ற இப்பதி திருநாவுக்கரசரால் தேவார வைப்புத் தலமாகப் போற்றப்பட்டுள்ளது.

தேவாரத்தில் இரண்டு இடங்களில் இந்தத் திருத்தலத்தை நினைவு கூர்ந்துள்ளார் அப்பர் பெருமான்.

பக்தர்களை சிவபெருமான் காக்கும் தலங்கள் உலகில் எண்ணற்றவை இருப்பினும், திருவதிகை வீரட்டானம், சீர்காழி, திருவலம், திருவேட்டி, திருவேடகம், திருவூறல் [தக்கோலம்], திரு அம்பர், உறையூர், திருநறையூர் அரணநல்லூர், திருவிளமர், திருவெண்ணி திருமீயச்சூர், திரு வீழிமிழலை, திருக்கரபுரம் ஆகிய தலங்களை ஆறாம் திருமுறையில் தனது காப்புத் திருத்தாண்டகத்தில் காப்புத் தலங்களாக குறிப் பிடுகின்றார் அப்பர் பெருமான்.

அருணகிரிநாதர் இப்பதி ஆறுமுகப் பெருமான் மீது மூன்றுத் திருப்புகழினைப் பாடியருளியுள் ளார்.

வேதவதி நதி ஒரு காலத்தில் இந்தக் கரபுரீஸ் வரர் ஆலயத்தை ஒட்டியே பாய்ந்தோடியதாகக் கூறப்படுகிறது. இதற்கு சான்றாக இன்றும் மணற்பாங்கான இடங்களை இங்கு காண முடிகின்றது. தற்போது ஆலயத்திற்கு சற்று தூரத்தில் வேதவதி நதி ஓடுகின்றது.

ஊரின் வடபுறம் ஆலயம் அழகுற அமைந்துள் ளது. கிழக்கு நோக்கிய 3 நிலை இராஜகோபுரம். தென்கிழக்கில் மடப்பள்ளியும், வடகிழக்கில் நவகிரக சன்னிதியும் உள்ளது. நவகிரக மண்டபத்தையொட்டி யாக சாலையும், அருகே தலவிருட்சமான வில்வ மரமும் அமைந்துள்ளன.

நேராக த்வஜஸ்தம்பம், நந்தி, பலிபீடம். பின் இரண்டாம் வாயிலுள் நுழைகின்றோம். இது உள்பிராகாரமாகும். உட்பிராகார வலம் வருகை யில், நிருர்தி மூலையில் சங்கடஹர கணபதி அழகுற காட்சியளிக்கின்றார். வாயு மூலையில் வள்ளி மற்றும் தெய்வானையுடன் ஸ்ரீ ஷண்முகர் அழகே உருவாய் அருள்பாலிக்கின்றார்.

மேற்கு கோஷ்டத்தில் ஸ்ரீ மகாவிஷ்ணு அமர்ந்த நிலையில் பிரயோகச் சக்கரம் ஏந்தியபடி எழில் சிந்துகின்றார்.

பின் அம்பிகையின் சன்னிதியடைந்து, அன் னையை மனம் குளிர வணங்குகின்றோம். தென்முகமாகக் காட்சியளிக்கும் அம்மை இங்கு அபீதகுஜாம்பாள் என்கிற பெயர் தாங்கி பாச அங்குச, அபய வரத ஹஸ்தங்களுடன் நின்ற வண்ணம் பேரருள் புரிகின்றாள்.

ஸ்வாமி சன்னிதி, மகாமண்டபம், அர்த்த மண்டபம், கருவறை என்கிற அமைப்பில் அமைந்துள்ளது. கருவறையுள் கதிரொளி வீசி நம்மை கவர்ந்திழுக்கின்றார் திருக்கரபுரீஸ்வரர். அருள்வள்ள இப்பெருமானை வணங்கி, பெரு மிதமும், புலகாங்கிதமும் அடைகின்றோம்.

வெளிச்சுற்றின் வாயு பாகத்தில் ஜேஷ்டாதேவி மற்றும் ரேணுகாதேவியை தரிசிக்கின்றோம். உடன்






www.aanmeegamalar.com





நாகர் சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இவ்வாலய சிற்பங்கள் ஒவ்வொன்றும் அற்புதப் படைப்புகளாக திகழ்கின்றன.

இரண்டு வேளை பூஜைகள் நடைபெறுகின்றது. தினமும் காலை 7 மணி முதல் 11 மணி வரையும், மாலை 5 மணி முதல் 7 மணி வரையும் ஆலயம் திறந்திருக்கும். அனைத்து சிவாலய விசேஷங்களோடு, மாசி மகோற்சவமும் சிறப்புற அனுசரிக்கப்படுகின்றன.

இவ்வாலயத்தின் சோழர்கால கல்வெட்டுகள் தமிழ் மற்றும் கிரந்த எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுளளது.

கி.பி. 975 ஆம் ஆண்டு இரண்டாம் பராந்தகச் சோழனின் படைத் தலைவனான "பார்த்தி வேந்திராதி வர்மன்" காலத்திய கல்வெட்டின்படி, இவ்வூர்...."ஜெயங்கொண்ட சோழ மண்டலம், படுவூர் கோட்டத்து, காவேரிபாக்கமாகிய அவனி நாராயணச் சதுர்வேதி மங்கலத்தைச் சார்ந்த திருக்கரபுரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அதோடு, கரபுரீஸ்வரர் கோயிலுக்கு நிலங்கள் ஒதுக்கி, அவற்றின் இருநாழி நெல்லால் கிடைக்கும் அரிசியைக் கொண்டு, இறைவனுக்கு அமுது படைக்கவும், அந்நிலத்தின் வாயிலாகக் கிடைக்கும் இதர வருவாயினால் மூன்று வேளைகள் திருவிளக்கேற்றி ஆராதனை செய்யவும், இவற்றை கல்வெட்டு சாசனம் செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு குடமுழுக்குக் கண்டு, பொலிவுடன் திகழ்கிறது ஆலயம்.

எதிர்வரும் ஆபத்துகளை முன்கூட்டியே உணரும் தன்மையையும், ஆபத்துகளிலிருந்து காப்பினையும் தந்தருளுகின்றார் இத்தலத்து கரபுரீஸ்வரர்.

ஸ்வாமி அம்பாளுக்கு திரவிய அபிஷேகங்கள் செய்து, வெண்பட்டு சாற்றி, வெண்பொங்கல் நிவேதித்து, பிரார்த்தனை செய்தால் பேராபத்துகளில் இருந்தும் தப்பி விடலாம் என்பது முன்னோர் நம்பிக்கையாகும்.

இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா வட்டத்தில், வேலூர் சென்னை தேசிய நெடுஞ்சாலையில் வாலாஜாப்பேட்டைக்கு அடுத்துள்ள காவேரிப்பாக்கத்தில் இருந்து தெற்கே மூன்று கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது திருக்கரபுரம் என்னும் திருப்பாற்கடல்.

ஜோதிட கலாநிதி.
மோ.கணேஷ் குருக்கள், ஆரணி.
தொடர்புக்கு: 9789156179.

# மதுரையில் வானரவீரர்களுக்கு வீரம் கொடுத்த ராமன்








ராமாயண காலத்தில் ராமபிரான் இலங்கை சென்று போரிட வானர படை களை அனுமன் தலைமையில் தயார் செய்து அனுப்பிய போது பிருந்தாவன காட்டில் வந்த வானர படைகள் அங்கு உள்ள பழங்கள் மற்றும் இயற்கை உணவுகளை உண்டு மயங்கின.

இலங்கை சென்று போரிடுவதை மறந்து காட்டில் மயங்கிஇருந்த போது அங்கு வந்த ராமபிரான் வான படைகளுக்கு எதற்காக நாம் வந்தோமோ அதை மறக்க கூடாது.

செய்கின்ற பணிகளை கவனமுடன் பல கஷ்டங்கள் வந்தாலும் கடமையை முடித்து காட்ட வேண்டும் என உபதேசம் செய்தார்.

ராமரின் உபதேசத்தை வானர படைகள் தலை வணங்கி ஏற்று கொண்டு ஒற்றுமையுடன் அனுமன் தலைமையில் இலங்கை செல்ல கடலில் பாலம் அமைத்து சென்று போரில் வென்று சீதையயை மீட்டு மீண்டும் இதுபோன்று நிகழ்வுகள் நடைபெறகூடாது.

என அனுமனுக்கு ஆசி வழங்கி மகுடம் சூட்டியதாக கூறப்படுகிறது. அதன் நினைவாக மாவலி மன்னர் வீர அழகர் கோவிலை மானாமதுரை வைகைஆற்றில் கட்டி அதில் வீர ஆஞ்சநேயர் தனிசன்னதியும் அமைத் தார்.



அழகுராஜா

வானர படைகள் இங்கு வீரம்பெற்ற தால் வானரவீரமதுரையாக இருந்து பின் மருவி மானாமதுரை என அழைக்கபடுகிறது. ராமர், அனுமார் பாதம் பட்ட பகுதியாக மானாமதுரை உள்ளது. வானர படைகள் பழங்கள் உண்டுமயங்கிய பிருந்தாவனம் தற்போது அதே பெயரில் பிருந்தாவன தெருவாக தற்போது உள்ளது.

வானரர்கள் இங்கு வீரபெற்றதால் வீர ஆஞ் சநேயர், ஜெயவீர ஆஞ்சநேயர் என மானாமதுரை ரயில் நலையத்தில் தொடங்கி வைகை கரையோரம் வரை ஏராள மான அனுமன் கோவிலாக மானாமதுரை யில் இப்போது கணலாம்.

ராமர் சென்ற காலடி முழுவதும் இலங்கை வரை இப்போதும் ராமர் ஆஞ்சநேயர் கோவில்கள் உள்ளது. மானாமதுரையில் வீர ஆஞ்சநேயராகவும், குறிச்சியில் காசிஅனுமராகவும் பக்த்தர்களால் வணங்கபட்டு வருகிறது.

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994162182

# ஒரு மனிதனை உருவாக்குவது என்பதே தன்னம்பிக்கைதான்

அழுகும்நிலை, அழுகும் தன்மை இவையே உலகின் அற்புதம் இதைச் செய்தவன் ஆண்டவனே. வேறு எந்த கிரகங்களிலும் இந்த அழுகும் தன்மை கிடையாது. இது உயிரில் தத்துவமாக வளர்ந்து உலகில் உயிருள்ள செடிகொடிகள் வரை வியாபித்து இருக்கிறது. அழுகும் நிலையும் மரணமும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய மரணத்தின் தத்துவம் மட்டும் அல்ல. சுத்த உயிரின் விடுதலை தத்துவமும் ஆகும். உயிர்களின் விடுதலை அழுகு தன்மையில் தான் வைக்கப்பட்டுள்ளது.

❖❖❖

மேலான விஞ்ஞானக்கலையிலும் அல்லது வேறு உயரிய கருத்தின் வழியாகவேனும் இந்த அழுகும் தத்துவத்தை தடுக்க முடியுமா? இதைக் கட்டுப்படுத்த முடியாது. ஆனால் உயிர் என்ற சுத்த தத்துவம் இந்த அழுகும்நிலையில் ஒட்டுவதே இல்லை. ஆகவே உடம்பு அழுகியவுடன் பிரிந்து விடுகிறது. இதுதான் அதனது மேன்மை. இம்மாதிரியான கலையை புத்தர் கண்டு விட்டார். நல்ல பதில் எனக்குத் தெரியவில்லை என்று சொல்லிவிட்டார். இக்கருத்தை சிந்தனை செய்யும் போட்டியாளர்களில் அவரும் ஒருவராக இருந்தார்.

❖❖❖

அன்பரே உலகம் எப்பொழுதும் கடவுளை பழிக்கவோ அழிக்கவோ முடியாது. மேலே சொன்ன அழுகும்நிலைதான், கடவுள் தத்துவத்தை இன்று வரை உலகில் நிலைக்கச் செய்துள்ளது. மதங்களிலும் நிலைக்கச் செய்துள்ளது. மதங்களிலும் இதனால்தான் வாழுகிறது.



❖❖❖

நான் மிகமிகத் தெளிவாகவும், மிக அதிகமாகவும் ஒரு புதிய பொருளை உனக்கும் உன்னுடைய சிந்தனைக்கும் சொல்லவே இக்கருத்துக்களை எழுதுகிறேன்.

❖❖❖

உலக மக்களின் பெரும்பான்மையானவரின் நம்பிக்கை ஒன்று இருக்கிறது. அந்த சிறப்பு நம்பிக்கை யார் தெரியுமா? யார் மீது மக்கள் வைத்திருக்கிறார்கள் தெரியுமா? அவன் பெயரே கடவுள். இக்கடவுளை பல விமர்சனங்களால் குறிப்பிடுகிறார்கள். அந்த விமர்சனங்களைத் தரும் ஸ்தாபனங்களுக்கே மதம் என்று பெயர். வேறு சிலர் இக்கருத்தை எவ்வண்ணம் எண்ணி அவ்வண்ணமே கூறினார்கள் தெரியுமா? ஈடு இணையற்ற ஒரு சக்தியோ அல்லது உருவமோ அதுவே நமது கண்களுக்கு தியானம் செய்தால் தோன்றும். அவனே கடவுள் என்று விமர்சித்தனர். இத்தன்மை உடையவனுக்கு உருவமும் உண்டு அருவமும் உண்டு என்பதே கடவுள்.

❖❖❖

மேலே கூறியதைப் போன்று மதம் என்ற சமயங்களுக்கு பல விமர்சனங்கள் இருக்கின்றன. அதிலே ஒன்றை சுவைப்பதற்காக பார். சுவையை அறியும்பொழுது அத்தன்மைக்கே கடவுள் நம்பிக்கை என்று பெயர். இந்த உலக நம்பிக்கை ஒரு அதீதமான சக்தியுள்ள புருஷன் ஆணாகவும் பெண்ணாகவும் காட்சி தந்து கொண்டு உயிர்களை கட்டுப்படுத்தி கொண்டு

அவைகளையும் ஆட்சி செய்கிறான். இவ்வண்ணமே உலகிலுள்ள எல்லா கிரகங்களையும் அச்சக்தியே கட்டுப்படுத்துகிறது. இதை சொல்லுவதும் மதமே.

❖❖❖

எல்லாக் கோணங்களிலும் அந்த அதீத புருஷனையும் அல்லது அந்த சக்தியையும் விளக்குகிறீர்களே அது உண்மையா? அதிலே உண்மை இருக்கிறதா? அல்லது மக்கள் நம்பிக்கைதான் வைத்திருக்கிறார்களா? இதை உலகம் அறிய வேண்டும். எவ்வண்ணத்திலும் எங்கள் அனைவருக்கும் புரியும் படியாக நீங்கள் இக்கருத்தை விளக்குவீர்களா?

❖❖❖

விஞ்ஞானிகளை ஆத்திகர்கள் என்று தவறாக எண்ணி கடவுளை நம்பாதவர்களே அவர்களை உங்கள் பக்கம் தவறாக சேர்த்துக் கொண்டு விடாதீர்கள். உண்மை என்னவெனில் விஞ்ஞானிகள் பிரகிருதி என்ற பஞ்சபூதத்தையும் பூமியின் அதிசயத்தையும் கிரகங்களிலிருந்து தோன்றும் சக்தியையும் சிறிது சிறிதாக விளக்கிக் கொண்டு வருகிறார்கள். மறைந்திருக்கும் அவைகளை நம்பித்தான் ஆராய்ச்சி செய்கிறார்கள் என்பதால் அவர்களும் மறைந்திருக்கும் கடவுள் சக்தியை யோசிக்கிறார்கள். விஞ்ஞானியின் உண்மைத்தன்மை என்னவென்றால் ஆராய்ச்சி செய்வதற்கு முன் தனது மூளையை நம்பி நம்பிக்கை வைப்பது, பிறகே ஆராய்ச்சி செய்வது என்பதாகும். நம்பிக்கை உள்ளவனே உண்மையை கண்டுபிடிக்க எப்பொருள்களுக்குள்ளும் நுழைவான். இந்த வரிசை முறையில் தான் மதநம்பிக்கையாளர்களும் வருகிறார்கள்.

❖❖❖

ஒரே ஒரு மனிதனும், அவனது ஒரு கருத்து மட்டும் மேதைத்தன்மையாக இருக்கலாம். அது மட்டுமே பரவும். அதுவே ஒரு மனிதன் கண்மூடித்தனமாக ஒரு கருத்தை பரப்பி உலகிலுள்ள ஆணையும் பெண்ணையும் ஒட்டுமொத்தமாக சமுதாயத்தையும் முட்டாளாக ஆக்க முடியாது. ஒரு மனிதனை உருவாக்குவது என்பதே தன்னம்பிக்கைதான். இதற்கே உபதேசம் என்று பெயர். இதுவே மதத்தின் விஞ்ஞானம்.

❖❖❖

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028




ஆசிரியர், வெளியீட்டாளர்
**N.P.சந்திரன்**
**C.V. நடராஜன்**
செல்: 9444228203
♦♦♦
முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162192
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572
♦♦♦
வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
**aanmeegamalar.com**
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



## ஆசிரியர் குழுவில் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
**9444228203**

# மூக்குத்தியின் ரகசியம்



மூக்குத்தி குத்திக் கொள்வதால் பெண்களுக்கு பல்வேறு நன்மைகள் ஏற்படுகின்றன என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். ஆண்களின் மூச்சுக்காற்றை விட பெண்களின் மூச்சுக்காற்றுக்கு சக்தி அதிகம். இதனால் பண்டைய காலத்திலேயே மூக்கு குத்திக் கொள்ளும் வழக்கம் உருவானது. மூக்கு குத்துவதினாலும் காது குத்துவதினாலும் உடலிலுள்ள வாயுக்கள் வெளியேறுகின்றன.

உடலிலுள்ள வெப்பத்தைக் கிரகித்து நீண்ட நேரம் தன்னுள்ளே வைத்திருக்கூடிய ஆற்றல் தங்கத்துக்கு இருக்கிறது. மூக்குப் பகுதியில் ஒரு துவாரத்தை ஏற்படுத்தி அந்த துவாரத்தில் தங்க மூக்குத்தி அணிந்தால் அந்த தங்கம் உடலில் உள்ள வெப்பத்தை கிரகித்து தன்னுள்ளே ஈர்த்து வைத்துக் கொள்ளும் சக்தியைப் பெறும். அதுமட்டுமல்லாமல் மூக்கின் மடல் பகுதியில் ஒரு துவாரம் ஏற்பட்டால் அதன் மூலம் நரம்பு மண்டலத்தில் உள்ள கெட்ட வாயு அகலும். பருவ வயதை அடைந்த பெண்களுக்கு கபாலப் பகுதியில் அதாவது தலைப்பகுதியில் சிலவிதமான வாயுக்கள் இருக்கும். இந்த வாயுக்களை வெளிக் கொண்டு வருவதற்குத்தான் மூக்குக் குத்தப்படுகிறது. மூக்குக் குத்துவதால் பெண்கள், சளி, ஒற்றைத் தலைவலி, மூக்கு சம்பந்தமான தொந்தரவுகள், பார்வைக் கோளாறுகள், நரம்பு சம்பந்தமான நோய்கள் மற்றும் மனத்தடுமாற்றம் போன்றவற்றில் இருந்து பாதுகாக்கப்படுகிறார்கள்.

கைரேகை, சோதிடம் பார்ப்பவர்கள் ஆண்களுக்கு வலது கையும், பெண்களுக்கு இடதுகையும் பார்த்து பலன் கூறுவது வழக்கம். ஆண்களுக்கு வலப் புறமும் பெண்களுக்கு இடப் புறமும் பலமான, வலுவான பகுதிகளாகும்.

ஞானிகளும் ரிஷிகளும் தியானம் செய்துபோது வலது காலை மடக்கி இடது தொடை மீது போட்டு தியானம் செய்வார்கள். இதற்கு காரணம் இடது காலை மடக்கி தியானம் செய்யும் போது வலது பக்கமாக சுவாசம் போகும். வலது என்றால் தமிழில் வெற்றி என்று பொருள். வலது பக்கமாக சுவாசம் செல்லும்போது தியானம், பிராத்தனை எல்லாம் கண்டிப்பாக பலன் தரும்.

இந்த நாடியை அடக்குவதாக இருந்தால் வலது பக்க சுவாசத்திற்கு மாற்றவேண்டும். அதே மாதிரி ஒரு அமைப்புத்தான் மூக்குத்தி.

நமது மூளைப் பக்கத்தில் ஹிப்போதெலமஸ் (Hippotelamas) என்ற பகுதி இருக்கிறது. நரம்பு மண்டலங்களை கட்டுப்படுத்தக் கூடிய, செயல்படக் கூடிய அளவு சில பகுதிகள் உள்ளன.

அந்தப் பகுதியில் சில உணர்ச்சி பிரவாகங்கள் உள்ளன. இதனைச் செயல்படுத்துவதற்கு அந்தப் பகுதி துணையாக இருக்கிறது. இப்படி இந்தப் பகுதியை அதிகமாக செயல் படுத்துவதற்கும் பெண்ணின் மூக்கில் இடது பக்கத்தில் குத்தக் கூடிய முக்குத்தி வலது பக்க மூளையை நன்றாக செயல் படவைக்கும்.

இடது பக்கத்தில் முளை அடைப்பு என்றால் வலது பக்கத்தில் நன்கு வேலை செய்யும். வலது பக்கம் அடைத்தால் இடது பக்கம் உள்ள மூளை அதிகமாக இயங்கும்.

இன்றைய நம்முடைய மனித வாழ்க்கைக்கு அதிகமாக இந்த இடது பக்க மூளையை அடைத்து வலது பக்கமாக வேலை செய்ய வைக்கிறோம். அதனால் வலது கை, வலது கால் எல்லாமே பலமாக உள்ளது.

இதனால்தான் நம் முன்னோர் பெண்களுகு மூக்கு குத்துவதை வழக்கமாக வைத்துள்ளனர்.




# சிதிலமடையும் நிலையில் ரெட்டாகுறிச்சி சிவன்கோயில்

கடலூர் மாவட்டம், வேப்பூர் வட்டம், ரெட்டாகுறிச்சி சிவன்கோயில், இரட்டைப்புலவர் அல்லது இரட்டையர் எனப்படுவோர் கிபி 14ம் நூற்றாண்டு காலப் பகுதியில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்கள். இளஞ்சூரியர் முதுசூரியர் என்ற இவர்களில் ஒருவருக்கு பார்வை கிடையாது மற்றொருவருக்கு கால்கள் கிடையாது. இவர்களில் கால் இல்லாதவரை பார்வை இழந்தவர் தனது தோள்களில் சுமந்து நடப்பார் என்றும், கால் இல்லாதவர் அவருக்கு வழி நடத்தி செல்வார் என்றும் பண்டைய காலச் சுவடுகள் தெரிவிக்கின்றன

கலம்பகம் பாடுவதில் சிறப்புத் திறமை உடையவர்கள் என்பதால் கலம்பகத்திற் கிரட்டையர் என பெயரும் இவர்களுக்கு உண்டு இவர்கள் சிலேடையாகப் பாடுவதில் வல்லவராவர் பல சிவாலயங்களை பாடியுள்ளனர்

இவர்கள் சோழ மண்டலத்தில் உள்ள ஆலந்துறையில் முருகனை குலதெய்வமாக கொண்ட நவவீரர் வம்சமான செங்குந்தர் கைக்கோள முதலியார் மரபில் அத்தை மகன், மாமன் மகனாக பிறந்தவர்கள்

இப்பகுதியில் குறிச்சி என பல கிராமங்கள் உள்ளதால், இரட்டைப்புலவர்களால் பாடல் பெற்ற இதனை இரட்டை குறிச்சி என அழைக்கப்பட்டு பின் ரெட்டாக்குறிச்சி என மாறியதாக கருதலாம்

கடலூர் மாவட்ட மேற்கு எல்லைபகுதியான வேப்பூர் குறுக்கு சாலையை தாண்டி சரியாக 11வது கிலோமீட்டரில் ரெட்டாகுறிச்சி பேருந்து நிறுத்தம் உள்ளது

வலதுபுறம் ஒரு பாரத் பெட்ரோலியம் எரிபொருள் நிரப்பு மையத்தை ஒட்டி வடக்கு நோக்கி செல்லும் சாலை நம்மை ரெட்டாகுறிச்சிக்கு அழைத்து செல்லும் பெரிய ஏரியின் கரையோர கிராமம், ஏரிப்பாசனத்தால் அன்றும் இன்றும் இவ்வூர் மிக பசுமையாக செழிப்புடனும் இருக்கிறது

சில நூற்றாண்டுகளின் முன்னம் பசு வளர்ப்பு பிரதான தொழிலாக இருந்தது, இதனால் பால் உற்பத்தியில் சிறந்து விளங்கினர் பாலை உள்ளூரிலும்,வெளியூரிலும் விற்று வந்தனர்

இம்மக்கள் தங்கள் ஊரில் பழுதடைந்த சிவாலயத்தினை திருப்பணிகள் செய்துவந்தனர்பணிகள் முடிந்துவிட்ட நிலை, அப்போது, ஒருவர் மாட்டுவண்டியில் பால் நிரப்பப்பட்ட பானைகளை வைத்துக்கொண்டு விற்பனை செய்ய வெளியூருக்கு கொண்டு செல்லுகையில் ஒரிடத்தில் ஒரு கல்லின் மீது ஏறிய வண்டி திடீரென கவிழ்ந்து பானையில் உள்ள பாலானது அந்த






கல்லின் மீது கொட்டிவிடுகிறது.

ஒரு நாள் கவிழலாம், ஆனால் தினந்தோறும் இந்நிகழ்வு நடைபெறுவதை கண்டு கோபம் கொண்ட பால்காரன் ஒரு மண் வெட்டியைக் கொண்டு அந்த இடத்தை தோண்டும் போது கல்லில் மண்வெட்டி படவே அந்த கல்லில் இரத்தம் வழிந்தது அதை கண்டு பீதியடைந்த அவன் ஊரை கூட்ட, எல்லோரும் சேர்ந்து தோண்டி பார்த்தபோது அங்கே ஒரு சிவலிங்கம் இருந்ததை கண்டனர்.

ஊர் மக்கள் அந்த சிவலிங்கத்தை புதிதாய் கட்டப்பட்ட ஆலயத்தின் கருவறையில் வைக்க முடிவு செய்தனர். ஆனால் கருவறையின் நுழை வாயில் சிறிதாக இருந்ததால் கருவறையின் நுழை வாயிலின் முன்னே வைத்து வணங்கினார்கள் இதனால் இங்கு இறைவன் கருவறையில் இல்லாமல் இடைநாழி பகுதியில் உள்ளார்.

இறைவன் கைத்தலநாதர் இறைவி அனுகூலாம்பிகை இறைவனுக்கு கைத்தலநாதர், கைத்தலநாதேஸ்வரர், வானகாத்தவநாதர். வானகாத்தவநாதேஸ்வரர் என பெயர்களும் கல்வெட்டில் வழங்கப்படுகிறது.

பல சிறப்புக்கள் கொண்ட கோயில் தற்போது வரை ஒதுக்கப்பட்ட ஒரு கோயிலாக ஊரிலிருந்து சற்று தள்ளி வடகிழக்கு பகுதியில் உள்ளது.

மதில் சுவர், கோயில் கோபுரம் கருவறை, முகப்பு மண்டபம், மடைப்பள்ளி என சிதைவடையாத பகுதியே இல்லை என்று சொல்லலாம்.

முற்றிலும் செங்கல் சுண்ணம் கொண்டு கட்டப்பட்ட தளி என்பதால் சிதைவுகளுக்கு பஞ்சமில்லை கோயிலின் காலம் என்றால் அது ஆயிரம் வருடங்களை கடந்தது பொது ஆண்டு 921–ன் பராந்தகன் கல்வெட்டு கிடைத்துள்ளது.

மூன்று நிலை ராஜகோபுரம் இறைவன் சன்னதிக்கு நேராக கிழக்கு பார்த்து அமைந்துள்ளது அதனை கடந்தவுடன் வலதுபுறம் அம்மன் சன்னதி உள்ளது அதற்க்கு முன் பதினாறு உயர்ந்த தூண்கள் கொண்ட மகாமண்டபம் அம்மன் சன்னதிக்கு முன்பாக உள்ளது.

அதில் இக்கோயிலை கட்டுவித்த மன்னர்களது சிலைகள் தூணில் புடைப்பாக செதுக்கப்பட்டுள்ளது

புருஷாமிருகம் பூஜை செய்வது போன்ற சிற்பமும், வேடுவன் ஒரு கம்பினை வைத்துகொண்டு நிற்பது போன்ற சிற்பமும் உள்ளன இந்த மண்டபம் பிற்காலத்தது ஆகலாம், அதாவது நாயக்கர் காலம் சில பெயர்கள் அந்த மன்னர்கள் சிற்பத்தின் மேல் காணப்படுகின்றன. படிக்க இயலவில்லை.









பெரிய வெட்டவெளி அடுத்து இறைவன் கருவறை தனித்து உள்ளது இறைவன் கருவறை முன்னம் ஒரு பெரிய கூம்பு வடிவ மண்டபம் உள்ளது இதில் தான் கருவறைக்கு முன்னதாக லிங்க மூர்த்தியும் உள்ளார். .

பிரகாரத்தில் முதல் சன்னதியில் பெரிய லிங்க மூர்த்தி ஒன்றும், அருகில் கை உடைந்த அம்பிகை மற்றும் சில அடையாளம் சொல்ல முடியா சிலைகளும் உள்ளன

அடுத்த சன்னதியில் சப்த மாதர் விநாயகர் மற்றும் ஒரு சண்டேசர் சிற்பமும் உள்ளன இவை எவையும் பிரதிஷ்டை செய்யப்படாமல் ஆங்காங்கே கிடத்தப்பட்டுள்ளதை கண்டு மனம் வேதனைப்படுவதை தவிர்க்க இயலவில்லை.

இது கோயில் தானா அல்லது காட்சிக்கூடமா என எண்ணி பெருமூச்செழுகிறது உடைந்தவை வெளியில் கிடத்தப்பட்டுள்ளன.

தனி சிற்றாலயங்களாக விநாயகர், முருகன் சண்டேசர் சன்னதிகளும் உள்ளன. முருகன் தனித்த சிலையாக உள்ளார் மிக பழமையான மூர்த்தி கல்லில் புடைப்பாக செதுக்கப்பட்டுள்ளது. கருவறை வெளி சுவரில் விநாயகர் புடைப்பு சிற்பமாகவும், தக்ஷிணமூர்த்தி மட்டும் கோட்டம் போன்ற அமைப்பில் உள்ளார். அனைத்து கோயில்களிலும் தக்ஷிணமூர்த்தி முயலகன் மீது வலது காலை ஊன்றி இடது காலை வலது கால் மீது ஆசனமிட்டிருப்பார் ஆனால் இங்கோ இடது காலை முயலகன் மீது ஊன்றி வலது காலை மேலே போட்டிருப்பார் இது பரந்தகன் கால வழக்கம் போலும் வழமையாக லிங்கோத்பவர் இருக்குமிடத்தில் இங்கு விஷ்ணு நின்றகோலத்தில் உள்ளார் வடபுற கோட்டத்தில் பிரம்மன் உள்ளார், துர்க்கை புடைப்பு சிற்பமாக சுவற்றில் உள்ளது.

கல்வெட்டு ஆய்வாளர் விழுப்புரம் வீரராகவன், குழுவினர் வரலாற்று ஆய்வுகளை மேற்கொண்ட போது இந்த ஊரில் உள்ள வானகாத்தவநாதர் என்ற இந்த பழைமையான சிவன் கோயிலில் நான்கு கல்வெட்டுகளும், மாரியம்மன் கோயிலுக்கு அருகே மூன்று கல்வெட்டுகளும் கண்டறியப்பட்டன இதில், மூன்று கல்வெட்டுகள் சோழர் காலத்தைச் சேர்ந்தவை. நான்கு கல்வெட்டுகள் 17 ம் நூற்றாண்டைச் சேர்ந்தவை.

சிவன் கோயில் கருவறைச் சுவரில், சோழர் காலத்தைச் சேர்ந்த மூன்று கல்வெட்டுகள் காணப்படுகின்றன சோழர்கள் காலத்தில் கட்டப்பட்டு அழிந்துபோன கற்களைப் பயன்படுத்தி

ஆன்மிகம் தத்துவம் உடல்நலம் பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்









இந்தக் கோயில் மீண்டும் கட்டப்பட்டிருக்கிறது இந்தக் கோயில் கருவறையின் மேற்குச் சுவரில் விஷ்ணுவுக்கு அருகே, உள்ள முதல் கல்வெட்டு கி.பி 921ம் ஆண்டைச் சேர்ந்த முதலாம் பராந்தக சோழனின் 14ம் ஆட்சியாண்டு கல்வெட்டு காணப்படுகிறது

இரண்டாவது கல்வெட்டு, கருவறையின் தெற்குச் சுவரில் தட்சணாமூர்த்தி சிலைக்கு அருகே காணப்படுகிறது முதலாம் இராஜராஜ சோழனின் மெய்க்கீர்த்தி மட்டுமே படிக்கக் கிடைக்கிறது மற்ற வரிகள் பிற்காலத்தில் தட்சிணாமூர்த்தியைச் சுற்றி கட்டப்பட்டுள்ள சுவரில் மறைந்துவிட்டன

மூன்றாம் கல்வெட்டு, கிரந்த மொழியில் 'ஸ்வஸ்திஸ்ரீ' எனத் தொடங்குகிறது.

நான்காம் கல்வெட்டு, கோயிலுக்கு முன்பு வலதுபுறம் கோபுரத்தின் அருகே பலகைகல் நடப்பட்டுள் ளது இதில் பெருமாள் செட்டியார் கொடுத்த கொடை தொடர்ந்து அவரது வம்சத்தினர் நடத்த வேண்டும் என வலியுறுத்தும் தகவல் உள்ளது ரெட்டாக்குறிச்சி மாரியம்மன் கோயிலின் எதிரில் 3 கல்வெட்டுகள் நடப்பட்டுள்ளது

தலமரம் வன்னி அக்னி மூலையில் உள்ளது மடைப்பள்ளி முற்றிலும் சிதைந்து விட்டது.

வடமேற்கு மூலையில் சன்னதி விதானம் முற்றிலும் இடிந்து போய் வானம் பார்த்த நிலையில் இரண்டு காக்கை கொடியுடன் ஜேஷ்டாதேவி ஒரு சிம்மத்தின் மீது அமர்ந்துள்ள கோலம், உடன் மாந்தன் மாந்தி உள்ளனர் அருகில் துர்க்கை நின்ற கோலத்தில் வைக்கப்பட்டுள்ளது முன்பு வடபுறம் வெட்டவெளியில் நவகிரகங்கள் தரையில் வைக்கப்பட்டு இருந்தன தற்போது அதனையும் காணவில்லை பைரவர் இருக்கும் வடகிழக்கில் ஒரு சதுரவடிவ சன்னதி ஒன்று கட்டப்பட்டுள்ளது அதில் இருக்கும் சிற்பம் அமர்ந்த கோலத்தில் உள்ளது ஆனால் வழமையான பைரவராக தெரியவில்லை.

பலப்பல சிற்பங்கள் தற்கால வழக்கத்தில் இல்லாத ஒன்றாகவும், காணக்கிடைக்காத பொக்கிஷங்களாகவும் உள்ளன.

தற்போது இக்கோவில் மிகவும் சிதிலமடைந்து, பாழடைந்தும் காணப்படுகிறது, தமிழக அரசும் ஆன்மிக அன்பர்களும் இக்கோவிலை புனர மைத்து பாதுகாக்க இவ்வூர்மக்கள் கோரிக்கை வைக்கின்றனர்.



# திருமணத்தடை, கண் பிரச்சனைகளை தீர்க்கும் நேத்ரபுரீஸ்வரர்

கௌதமர் மனைவியான அகல்யா என்ற பெண்ணை பிரம்மா வெகு சிரமப்பட்டு படைத்தார். தன்னை நாடி ஒருவர் இந்திரன் என அறிந்தோம் சாபம் விடுத்தாள். மதிம்சகாரதுர்மேதா தேவராக குதூஹால" என்றார் வால்மிகி. "கருங்கல் ஆய மருங்கு வீழ்வாள்" என சபித்தார் என்றார் கம்பர். புரந்திரனோ ஒரு மூலையில் நடுநடுங்கு பூனையாய் பதுங்கி நின்றான். அணங்குடை வச்சிரத்தோல் ஆயிரம் கண்ணோய்க்கு பல் பொறி" என்கின்றது கலித்தொகை. மாதர் குறியில் விழைவு கொண்டதால் அக்குறிகள் ஆயிரமாயிரமாய் உடல் எங்கும் தோன்றிவிட்டது. இராமன் கால் தூசியினால் அகலிகை சாப நிவர்த்தி பெற்றாள். ஆனால் இந்திரன் கதி என்ன ஆயிற்று?

சுமார் 1300 வருடங்களுக்கு முன்னர் இதிகாசங்களில் உள்ள இறைவனின் லீலைகள் பல்லவர்களை மிகவும் கவர்ந்தது. இவர்களுக்கு சைவ வைணவ பேதம் கிடையாது. இவர்களின் செப்போடுகள் எதை எடுத்தாலும் சிவன். விஷ்ணு விளங்கங்களை காணலாம். இராமாயணத்தில் முக்கியமாக இந்திரன் பெற்ற சாபத்தினை அவர்கள் நோக்கினார்கள். இந்திரன் சப்த ரிஷிகள் சுமந்த பல்லாக்கில் தனது தேவியான சசியின் இல்லம் செல்கின்றான். அவனுக்கு அவசரம் பல்லக்கினை சுமப்பவர்கள் முனி சிரேஷ்டர்கள் என்ற எண்ணமின்றி "ஸர்ப ஸர்ப" (சீக்கிரம் சீக்கிரம்) என்றான். பல்லக்கினை சுமந்துவரும் அகஸ்தியர் கோபமுற்று ஸ்ர்ப்போவ –பாம்பாக கடவாய் என சபித்துவிட்டார். உடலில் கண்களையுடைய இந்திரனுக்கு இச்சாபம் நேர்ந்தது என்ற புராணத்தினை பல்லவ ராயக்கோட்டை செப்பேடு விவரிக்கின்றது. இந்திரன் அகல்யா சாபங்களை போக்கிய பாம்பே ஆபரணமாகவும் எருதுவாகனமாகவும் கொண்ட சங்கரன் பாம்பு படுக்கை,பீதாம்பர உடை கருட வாகனம் கொண்ட விஷ்ணு இருவரையும் ஒரே ஆலயத்தில் நிறுத்திவிட்டனர். சிவன் விஷ்ணு இருவரையும் தரிசிக்கும் பாக்கியம் இந்த கிணார் கோயிலில் நமக்கு கிடைக்கும்.

ஆலய அமைப்பு:

ஆலயம் தெற்கு திசை பார்த்தவாறு அமைந்துள்ளது. ஆலயத்திற்கு அருகிலேயே குளமும் குளத்திற்கு உள்ளே சிறிய கிணறும் அமைந்துள்ளது. ஆலயத்திற்கு கோபுரம் இல்லை. இறைவன் கிழக்குதிசை நோக்கி அமைந்துள்ளார். அம்மன் தெற்கு திசை பார்த்து அருள்பாலிக்கின்றார். இறைவனை பார்த்தவாறு



சூரியனார் சிலை அமைந்துள்ளது. சூரியனார் சிலைக்கு பக்கத்தில் இந்திரன் ஐராவதத்தில் இறைவனை வணங்குகின்றார். கருவறை வாயிலில் வினாயகர் – முருகர் சிலைகள் அமைந்துள்ளன.

சதுரவடிவில் கருவறை அமைந்துள்ளது. கருவறை பின்புறம் சோமாஸ்கந்தர் புடைப்பு சிற்பம் கருவறை முழுவதும் அமைந்துள்ளது தெற்கு திசை பார்த்தவாறு ஐந்தடி உயரத்தில் விஷ்ணு சிலை அமைந்துள்ளது. பார்க்க அருமையாக உள்ளது. அருகிலேயே பைரவர் சிலை உள்ளது.

கருவறையின் வெளிபுற கோஷ்டாத்தில் நிஷ்ட கணபதி அமைந்துள்ளது. முறையே தட்சணாமூர்த்தி, விஷ்ணு, பிரம்மா, தூர்கை சிலைகள் உள்ளது. கோயிலினை சுற்றி பெரிய நந்தவனம் உள்ளது. நவகிரக கோயிலும் அம்மன் சன்னதியும் தனி தனியே அமைந்துள்ளது. கோயிலுக்கு வெளியே சுற்று பிரகாரத்தில் நந்தி, கொடிமரம் பலிபீடம் அமைந்துள்ளது. நந்திக்கும் இறைவனுக்கும் இடையில் இந்திரன் சிலை உள்ளது இங்கு விஷேஷமாகும்.

ஆலய அதிசயங்கள்:

சாதாரணமாக எந்த கோயிலிலும் மூலவருக்கும் நந்திக்கும் இடையே எந்த பிரதிமமும் குறுக்கிடாது. ஆனால் இங்கே மூலவ மூர்த்தி வீர வரதநாதருக்கும் நந்திக்கும் இடையே தேவேந்திரன் தன் ஐராவதத்தின் மீது அமர்ந்து சாப விமோசனம் பெற்று இறைவன் சிவனை தரிசிக்கின்றார்.

உடம்பெல்லாம் கண்ணாகப் பெற்ற இந்திரன் சாபம் நீங்கிய இவ்வூர் நேத்ரம் (கண்) நீங்கியதால் நேத்ரபுரம் "திருக்கண்ணார்" என்று அழைக்கப்பட்டு கிணார் என இப்போது அழைக்கப்படுகின்றது. இந்த ஆலய சிவனுக்கு நேத்ரபுரீஸ்வரர் என்ற பெயரும் உண்டு.

பல்லவர்கள் கோயில்களில் மூலவருக்கு பின் கருவறை சுவற்றில் சேமாஸ்கந்தர் புடைப்பு சிற்பம் வடிக்கப்பட்டிருக்கும். தொண்டை மண்டலத்தில் திருக்கழுக்குன்றம், மகாபலிபுரம், வல்லம், காஞ்சிபுரத்தில் உள்ள கைலாசநாதர் ஆலயம் ஆகிய இடங்களில் காணலாம். காஞ்சியில் உள்ள தர்மராசாரதம் காயாரோகணம் சோமாஸ்கந்தர்கள் மற்ற கோயில்களில் அமைப்பில் மாறுபட்டது.

ஆனால் இந்த கிணார் கிராமத்தில் அமைந்துள்ள சோமஸ்கந்தர் மற்ற எல்லா படைப்பு சிற்பங்களிலும் வேறுபட்டு கருவறை சுவர் முழுவதும் வியாபித்து புராதனத்தினை வெளிப்படுத்துகின்றது. இந்த சிற்பத்தில் ஒரு பெரிய ஆசனம் அதன் மீது சிவன் வலதுகாலை மடக்கி இடதுகால் தொங்கவிட்டு அர்த்த பத்மாசனத்தில் அமர்ந்து வஸ்தரயக்ஞோபவீதம் மகுடம் ஆடை மகர குண்டலம் ஹாரம் துவங்கி அருகில் உமையவள் ஒருக்களித்து வலதுகால் தொங்கி இடதுகால் மடக்கி ஆசனத்தில் ஊன்றிய கோலத்திலும் பின்னார் பிரம்மாவும். விஷ்ணுவும் தங்கள் கரங்களை வளைத்து சாமரம் வீசுவது போன்ற நிலையில் உள்ளனர்.

இடையில் தவழும் ஸ்கந்தனும் தனது வலக்கையை உயர்த்தி தூக்கிய வாறு காணப்படுகின்றார்.

விஷ்ணுவை ஒட்டி சேடி ஒருத்தி நீண்ட தண்டு கொண்ட சாமரம் ஏந்திய நிலையில் உள்ள தோற்றம் வேறு எங்குமே காணமுடியாது. பின்னால் உள்ள குடையும் நேராகவே உள்ளது. சிம்மாசனம் சிற்ப இழைப்பு இல்லாமல் பெரும்பாறையால் செதுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலயத்தில் பல்லவர் கால கல்வெட்டுக்கள்ஏதும் காணப்படவில்லை. முகப்பு மண்டபத்தில் உள்ள விளிம்புகளில் உள்ள கல்வெட்டுக்கள் பிற காலத்தை சேர்ந்ததாக உள்ளது. ஆலயத்தில் எல்லாமே











வித்தியாசம் தான். அம்பிகையின் பெயர் கம்பாநாயகி என்று உள்ளது. கம்பம் என்றால் நடுங்குதல் என பொருள்ஆகும். அம்பிகையே அரனைக்கண்டு நடுங்கியதால் கம்பாநாயகி என பெயர்பெற்றாள் போலும்.

இங்கு தாமரை இதழ் நிறமுடைய விஷ்ணு காணப்படுகின்றார். பல்லவர் காலத்தில் ஆலயங்கள் நிறுவி மன்னர்கள் பெயரையே தெய்வங்களுக்கு சூட்டுவது வழக்கம். அதுபோல இக்கிணார் கிராமத்திலும் பல்லவ மன்னன் வீரவர்மன் பெயரால் கோயில்கட்டி வீரவர்மேஸ்வரம் என பெயர் சூட்டியிருக்கலாம். பல்லவர்கால சிற்பங்களுக்கு கிணார் ஓர் எடுத்துக்காட்டாகும். கடந்த 15.07.1994 மற்றும் 20.06.2011 அன்று ஆலயத்திற்கு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது.

கிணார் ஆலய சிறப்புகள்:

இந்திரன் சாபம் நீங்கியதால் சுக்ர பரிகார ஸ்தலமாக விளங்குகின்றது. திருமணம் தடை, தாமதம் போன்ற பரிகாரங்கள் வெள்ளிக்கிழமைகளில் செய்ய நல்ல பலன்தரும்.

இந்திரனின் ஆயிரம் கண் நீங்கப்பெற்றதால் கண்சம்பந்தப்பட்ட அனைத்து நோய்களிலிருந்தும் விடுபட திங்கள்கிழமை இறைவனை தரிசித்தால் மிகவும் பயன்அளிக்கும்.

திருஞானசம்பந்தர் திருஷேத் திரக்கோவைஇரண்டாம் திருமுறை யில் இந்த ஆலயத்தினை குறிப்பிடு கின்றார்.

அண்ணாமலை யீங்கோயு மத்திமுத்தா
றகலாமுது குன்றங் கொடுங்குன்றமுங்
கண்ணார்கழுக் குன்றங் கயிலை கோணம்
பயில்கற்குடி காளத்தி வாட்போக்கியும்
பண்ணார்மொழி மங்கையோர் பங்குடையான்
பரங்குன்றம் பருப்பதம் பேணிநின்றே
எண்ணாயிர வும்பகலு
மிடும்பைக்கட னீந்தலாங் காரணமே.

கண்ணார் திங்கள் பொங்காவந்தாழ் புனல் சூடிப்பெண்ணாய் பேரருளாளன் பிரியாத கண்ணார் கோயில் கைத்தொழுவார்கட்கிடர்பாவம் நன்னாயாகும் நல்வினையாய் நணகும்மே.

கோயில் அமைவிடம்:

செங்கல்பட்டு மாவட்டதில் உள்ள மதுராந்தகம் – கருங்குழி கிராமத்தில் இருந்து 4 கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. செங்கல்பட்டு மாவட்டம் திருக்கழுக்குன்றத்திலிருந்து மதுராந்தகம் செல்லும் சாலையில் 20 கிலோமீட்டர் தொலை வில் அமைந்துள்ளது. அனைவரும் கிணார் கிராமத்திற்கு வந்து வீரவரநாதரின் அருள்பெருக. ஆலய தொடர்புக்கு: 9442177659, 9629113836.


வேலன்

– வேலன், போன்:
9894836096
திருக்கழுக்குன்றம்.

# இரண்டாவது நவபாஷான முருகன்




கொடைக்கானலிருந்து 18 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது பூம்பாறை கிராமம். இந்த முருகன் நினைத்தால் தான் நாம் இங்கு வர முடியும்” இந்த தேதியில், இந்த நேரத்தில் வரவேண்டும் என்பது அவன் விருப்பம் . மிகவும் சக்திவாய்ந்த நவபாசான முருகன்.

இந்தியாவில் உள்ள எல்லா கோவில்களிலும் ஐம்பொன் வெங்கலம் கற்களால் ஆன சிலை கள்தான் உள்ளன. ஆனால் இந்தியாவில் உள்ள இரண்டு கோவில்களில் மட்டுமே நவ பாஷானத்தால் உருவாக்கப்பட்ட அபூர்வமான சிலைகள் உள்ளன.

1. பழனி மலை மீதுள்ள தண்டாயுதபாணி முருகன் சிலை,

2. பூம்பாறை மலையில் உள்ள குழந்தை வேலப்பர் முருகன் சிலை.

உலகிலேய நவபாஷான சிலையை உருவாக்கி பிரதிஷ்டை செய்தவர் போகர் ஆவார். பழனி முருகன் சிலையை மட்டுமின்றி இந்தப் பூம்பாறை முருகன் சிலையையும் செய்தவர் போகர்.

பழனி மலைக்கும், பூம்பாறை மலைக்கும் நடுவில் உள்ள யானை முட்டி குகையில் தான் நவபாஷான முருகன் சிலையை உருவாக்கினார். அந்த சிலையைத் தான் பழனி மலை மீது பிரதிஷ்டை செய்தார். தண்டம் கொண்டு அச்சிலையை உருவாக்கியதால் அதற்கு தண்டாயுதபாணி என்று பெயர் சூட்டினார்.

அக்கோவிலை இறைவனிடம் வேண்டி சிவ பூதங்களால் கோவில் மற்றும் மண்டபகங்களை கட்ட செய்தார் என்பது வரலாறு.

பின்னர் மறுபடியும் சீனநாட்டிற்கு சென்று பஞ்சபூத சக்திகளை மீண்டும் பெற்று யானை முட்டி குகைக்கு வந்து ஞான நிலையை அடையும் பிரம்மத்தை உணர்ந்து கொள்ளவும் ஆதிபராசக்தியின் துணைகொண்டு குருமூப்பு என்ற அருமருந்தை நிலைநிறுத்தவும் பஞ்ச பூதங்களை நிலைப்படுத்தி அதன் மூலம் குருமூப்பு சிலையை உருவாக்கினார். அந்த சிலைதான் பூம்பாறை மலையுச்சியிலுள்ள குழந்தை வேலப்பர் சிலையாகும்.

ஒரு சமயம், அருணகிரிநாதர் பூம்பாறை மலையில் வீற்றிருந்த குழந்தையப்பரை தரிசிக்க வந்தார். அப்போது இரவு நேரமானதால் கோவில் மண்டபத்தில் தங்கி தூங்கிவிட்டார். அப்போது ராட்சசி ஒருவள் அருணகிரிநாதரை கொல்ல வந்தபோது முருகன் குழந்தை வடிவம் கொண்டு காவியுடை அணிந்திருந்த அருணகிரி நாதர் மீது ஏறி விளையாடிக்கொண்டிருந்ததைக்கண்டு குழந்தையும் தாயும்தான் தூங்கிக் கொண்டிருக் கிறார்கள் என்று எண்ணி அருணகிரிநாதரைக் கொல்லாமல் சென்று விட்டதாம். இதனை தனது ஞான திருஷ்டியால் நடந்த சம்பவத்தை கண்டு குழந்தை வேடம் வந்து தன் உயிரை காப்பாற்றியதால் குழந்தை வேலர் என்று அழைக்கப்பட்டு குழந்தை வேலப்பராக இன்றும் அருள் பாலித்து வருகிறார். அவரின் பக்கத்திலேலே அருணகிரிநாதருக்கும் சிலையுடன் கோவில் உள்ளது.



# தேவரோடு தேவராகவும், அழியாத செல்வவளமும் தரும்

# கோட்டூர் கொழுந்தீஸ்வரர்

அருள்மிகு தேனார்மொழியாள் அம்மன் உடனுறை கொழுந்தீஸ்வரர் திருக்கோயில் – திருக் கோட்டூர் தேவாரப்பாடல் பெற்ற 276 சிவாலயங்களில் இது 175 வது தேவாரத்தலம் ஆகும்.

**அமைவிடம்:**

மன்னார்குடியில் இருந்து தென்கிழக்கே திருத்துறைப்பூண்டி செல்லும் சாலையில் 16 கி.மி. தொலைவில் இத்தலம் இருக்கிறது. மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி ஆகியஇடங்களில் இருந்து பேருந்து வசதி உள்ளது. இத்தலத்திற்குப் பக்கத்தில் திருக்களர், திருவெண்டுறை ஆகிய பாடல் பெற்ற திருமுறைத் தலங்கள் உள்ளன.

இந்திரன் பூஜித்து பிரம்மஹத்தி தோஷம் நீங்கப் பெற்றதால், இத் தலத்தில் நீராடி இறைவனை வழிபடுபவர்களின் பிரம்மஹத்தி முதலானசகல தோஷங்களும் நீங்கும் என்பது நம்பிக்கை.

இத்திருக்கோவிலில் சோழர் காலக் கல்வெட்டுகள் 23 உள்ளன.

ரம்பைக்கு தரிசனம் தந்த இறைவன் வரங்கள் பல தந்து மறைந்தார்.

இந்திரனின் வாகனமான ஐராவதம் என்ற யானையும் இத்தல இறைவனை வழிபட்டது. தனது தந்தத்தால் பூமியில் கோடு கிழித்ததால் இத்தலம் கோட்டூர் எனப் பெயர் பெற்றது.

**இறைவன் திருப்பெயர்:** கொழுந்தீஸ்வரர், சமீவனேஸ்வரர்

**இறைவியார் திருப்பெயர் :** தேனார்மொழியாள்

**தல மரம்:** வன்னி

**தீர்த்தம்:** அமுதம், முள்ளியாறு, சிவ கங்கை, பிரமதீர்த்தம்,




www.aanmeegamalar.com





இந்திர தீர்த்தம், சிவதீர்த்தம், விசுவகர்ம தீர்த்தம், அரம்பை தீர்த்தம், மண்டை தீர்த்தம் என 9 தீர்த்தங்கள்.

வழிபட்டோர்: ஐராவதம், அரம்பை, தேவர்கள், குச்சர இருடிகள்

தேவாரப் பாடல்கள்: சம்பந்தர் நீலமார்தரு கண்டனே.

திருஞானசம்பந்தர் தேவாரம்

நீல மார்தரு கண்டனே நெற்றியோர்
கண்ணனே யொற்றைவிடைச்
சூல மார்தரு கையனே துன்றுபைம்
பொழில்கள்சூழ்ந் தழகாய
கோல மாமலர் மணங்கமழ் கோட்டூர்நற்
கொழுந்தேயென் றெழுவார்கள்
சால நீள்தல மதனிடைப் புகழ்மிகத்
தாங்குவர் பாங்காலே..

தல வரலாறு

விருத்திராசுரன் என்ற அரக்கன் தேவர்களை மிகவும் துன்புறுத்தி வந்தான். இந்திரன் அவனை வெல்வதற்கான வழியைக் கூறும்படி பிரம்மாவிடம் வேண்டினான். ததீசி என்ற முனிவரின் முதுகெலும்பை பெற்று அதை வஜ்ராயுதமாக்கி அதன் மூலம் மட்டுமே அரக்கனை கொல்லமுடியும் என்று பிரம்மா இந்திரனிடம் கூறினார். இந்திரனும் அதன்படி முனிவரைக் கொன்று அவரது முதுகெலும்பை வஜ்ராயுதமாக்கி விருத்திராசுரனனைக் கொன்றான். முனிவரை கொன்று முதுகெலும்பை பெற்றதால், இந்திரனுக்கு பிரம்மஹத்தி தோஷம் ஏற்பட்டது. இந்த தோஷத்தை போக்கிக்கொள்ள தேவகுருவான பிரகஸ்பதியை நாடினான்.

அவரின் ஆலோசனைப்படி இந்திரன்பூவுலகம் வந்து வன்னிமரத்தின் அடியில் இத்தலத்தில்




இருக்கும் சிவலிங்கத்தை ஒரு தீர்த்தம் உண்டாக்கி அதனால் அபிஷேகம் செய்து வழிபட்டான். சிவபெருமான் அருளால் பிரம்மஹத்தி தோஷமும் நீங்கப் பெற்றான். இந்திரன் பூஜித்ததால் இத்தலம் இந்திரபுரம் என்றும் அழைக்கப்பட்டது. இந்திரனின் வாகனமான ஐராவதம் என்ற யானையும் இத்தல இறைவனை வழிபட்டது. தனது தந்தத்தால் பூமியில் கோடு கிழித்ததால் இத்தலம் கோட்டூர் எனப் பெயர் பெற்றது. இந்திரன் பூஜித்து பிரம்மஹத்தி தோஷம் நீங்கப் பெற்றதால், இத்தலத்தில் நீராடி இறைவனை வழிபடுபவர்களின் பிரம்மஹத்தி முதலான சகல தோஷங்களும் நீங்கும் என்பது நம்பிக்கை.

கோட்டூர் இரண்டு பகுதிகளாக மேலக்கோட்டூர் என்றும், கீழக்கோட்டூர் என்றும் உள்ளது. மேலக்கோட்டூரிலுள்ள கோவிலே பாடல் பெற்ற சிவஸ்தலம். கோவிலுக்கு முதல் கட்டமாக ஒரு துழைவாயிலும், அதையடுத்து மேற்கு நோக்கிய மூன்று நிலை ராஜகோபுரமும்உள்ளது. இரண்டு பிரகாரத்துடன் விளங்கும் இக்கோவிலில் முதல் வாயில் வழியாக உள்ளே புழைந்ததும் கவச மிட்ட கொடி மரமும், பலிபீடமும் நந்தியும்உள்ளன. உள்பிரகாரத்தில் மூலவர் சுயம்பு மூர்த்தியாக அருள்பாலிக்கிறார்.

கருவறை கோஷ்ட தெய்வங்களாக நர்த்தன கணபதி, தட்சிணாமூர்த்தி, லிங்கோத்பவர், பிரம்மா, துர்க்கை உள்ளனர். சண்டேசுவரர் சந்நிதி உள்ளது. அம்பிகை தேனாம்பாள் சந்நிதி கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. நின்ற திருக்கோலத்தில் அம்பிகை காட்சி தருகிறாள். மாசி மகத்தன்று இத்தல இறைவனுக்கு பால் அபிஷேகம் செய்தால், லிங்கத்தில் அர்த்தநாரீஸ்வர வடிவம் தெரிவதை பார்க்கலாம் என்று கூறப்படுகிறது. தலத்தின் குறிப்பிடத்தக்க அம்சமாக உள்ளது இங்குள்ள ரம்பையின் உருவம். ஒரு சமயம் தேவலோகத்தில் இந்திரனின் சபையில் நடனம் ஆடியபிறகு களைப்பால் பூஞ்சோலையில் ரம்பை ஆடை விலகியது கூட அறியாமல் படுத்து உறங்க, அவ்வழி வந்த நாரதர் ரம்பையின் நிலைகண்டு கோபித்து அவளை பூவுலகில் பிறக்கும்படி சபித்தார்.

நாரதர் சாபத்திலிருந்து விடுபட, அவரின் அறிவுரைப்படி ரம்பை இத்தலத்தில் ஈசனை நோக்கி இடது கால் ஊன்றி, வலது கால் மடித்து, உள்ளங்காலில் இடது கையைவைத்து, வலது கையை தலைமேல் வைத்தபடி அக்னியில் நின்று தவம் செய்தாள். ரம்பைக்கு தரிசனம் தந்த இறைவன் வரங்கள் பல தந்து மறைந்தார்.

அவள் முன்பை விடவும் அதிகஈடுபாட்டுடன் சிவனை அனுதினமும் பூஜித்து வந்தாள். தவம் செய்த அமைப்புடன் காணும்ரம்பையின்உருவச் சிலை காணவேண்டிய ஒன்று. உமாமகேஸ்வரர், அற்புதமான அர்த்தநாரீசுவரர் ஆகியோரும் தரிசிக்க வேண்டிவர்கள்.

இக்கோயிலினுள் உள்ள அமுதக் கிணற்றோடு முள்ளியாறு, சிவகங்கை தீர்த்தம், பிரம்ம தீர்த்தம், இந்திர தீர்த்தம், சிவ தீர்த்தம், விஸ்வகர்ம தீர்த்தம், ரம்பை தீர்த்தம் மற்றும் மண்டை தீர்த்தம் என ஒன்பது தீர்த்தங்கள் இத்தல தீர்த்தங்களாக உள்ளன. தல விருட்சமாக வன்னி மரம் திகழ்கிறது.. திருஞானசம்பந்தர் இத்தலத்து இறைவன் மேல் பாடியருளியுள்ள இப்பதிகம் 2ம் திருமுறையில் இடம் பெற்றுள்ளது.



சிவத்திரு.குமரேசன்

தனது பதிகத்தின் ஒவ்வொரு பாடலிலும் இத்தல இறைவனை "கோட்டூர் நற்கொழுந்தே" என்று போற்றுகின்றார். கோட்டூர் கொழுந்ீசரை வணங்குபவர்கள் தேவருலகில் தேவரோடும் இனிந்திருப்பார்கள், அழியாத செல்வமுடைய வராய் இவ்வுலகில் புகழோடு வாழ்வார்கள், அடியவர்களின் வினைகள் நீங்கி இறைவன் திருவருளைப் பெறுவார்கள், வழிபடுவர்களுக்கு இடரும், கேடும் ஏதும் இல்லாமல் உலகெலாம் புகழுடன் விளங்குவர் என்று பதிகத்தில் குறிப்பிடுகின்றார்.

மேலும் தனது பதிகத்தில் கோட் டூரைப் பற்றி குறிப்பிடும் போது (7வது பாடல்) இத்தலம் மாடமாளிகை, கூடகோபுரம், மணிஅரங்கம், அழகியசாலை, புகழ்தற்குரிய மதில், பொன் மண்டபம் ஆகியவற்றோடு அழகிய பொழில்கள் சூழ்ந்த கோட்டூர் என்று கூறுகிறார்.

– சிவத்திரு.குமரேசன்இராஜசிம்மன்
உதவிப் பேராசிரியர்
SRM கலை, அறிவியல் கல்லூரி
PH: 919003296221
- easanaithedi.in

## நம்ம ஊரு கோவில்

உங்கள் ஊரில் உள்ள கோவில்களைப்பற்றிய தகவல்களையும், சிறப்புகளையும் e-mail, WhatsApp வாயிலாக டைப் செய்து அனுப்புங்கள்.

**நமது இதழ் மூலம் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்....**

பழமையான கோவில்கள், கிராமத்து கோவில் பற்றிய விவரங்களையும், வழிபாட்டு முறைகளையும் மற்றவர்கள் அறிந்து கொள்ள ஆன்மிக அன்பர்கள் வரவேற்கப்படுகின்றனர்.

இ-மெயில் முகவரி:
aanmeegamalar@gmail.com
aanmeegamalar1@gmail.com






# கீதாசமையல்

சமையலுக்கு புதியவரா? சுவையான சமையல் சமைக்க விரும்புகிறீர்களா? கவலையே வேண்டாம், கீதாசமையல் YouTube சேனலை பாருங்கள் புதிய மற்றும் பாரம்பரிய சமையல் குறிப்புகளை அறிந்து கொண்டு வீட்டிலேயே சுவையான சமையலை செய்து மகிழுங்கள்




ஓட்டல் சுவையில் புதிய உணவுகளை சமைக்க தொடர்ந்து நமது YouTube சேனலை பாருங்கள்

பாரம்பரியமான சமையல் குறிப்புகளை மிக எளிதாக, தெளிவாக அறிந்து கொள்ள (geetha samayal) youtube சேனலை பாருங்கள்

YouTube LIKE & SHARE

# ஆன்மீக வழியில் அமைதி

நாம் முதலில் ஆன்மீக குருவின் வேதாந்தம் தத்துவம் உபதேசங்களில் மற்றும் சாஸ்திரங்களின் மீது தளராத நம்பிக்கை வைத்துக்கொள்ள வேண்டும். நமது நம்பிக்கையினால் ஞானத்தினை அடையக்கூடிய மனநிலையை நாம் அடைகிறோம். சிரத்தையினால் அதாவது நமது நம்பிக்கையினால் ஞானத்தை அடைய முடியும். அதற்கு மனக்கட்டுப்பாடு மன ஒழுக்கம், இந்திரிய ஒழுக்கம், ஜீவகாருண்ய ஒழுக்கம், கடமையாற்றுதல் போன்றவை முக்கியமானதாகும். இவற்றைத் தவறாமல் கடைபிடிக்கும்போது நாம் விரும்பும் தேடும் மன அமைதி இயல்பாக நம்மிடம் வந்து சேரும்.

முதலில் நாம் தீமை தரக்கூடிய எண்ணங்கள் செயல்பாடுகள் போன்றவற்றில் இருந்து முற்றிலும் விலகியிருத்தல் வேண்டும். அனைவரிடம் அன்புடன் பழகுதல், சத்தியம், சமாதானம், இனிமை போன்றவைகள் நமது மனதில் எப்போதும் நிறைந்து இருக்க வேண்டும். மனம், வாக்கு, செயல் மூன்றிலும் நாம் உண்மையுடன் இருக்கும்போது செயல்படும்போது, நேரடியாகவே ஞானத்தை அடையலாம் என்று ஞானிகள் கூறுகின்றனர். அதனால் நமது வாழ்க்கையில் நாம் விரும்பும் தேடும் மன அமைதியையும் பெறலாம்.

ஆன்மீகத்தில் சிரத்தை, பக்தி மற்றும் விசுவாசம் என மூன்று நிலைகள் உள்ளன. சிரத்தை என்றால் எந்தச்செயல் செய்தாலும் அதில் பூரண கவனம், ஈடுபாட்டுடன் இருத்தல், நம்பிக்கை என்கிற பொருள் அடங்கும். ஆன்மீக வழியில் குறிப்பாக குரு வாக்கியத்தில் நம்பிக்கையுடன் கூடிய பூரண ஈடுபாட்டுடன் இருத்தல் வேண்டும். எடுத்துக்காட்டாக நாம் தியானம் செய்தால் அதில் முழு ஈடுபாட்டுடன் இருக்க வேண்டும். குருவின் வாக்கியத்தில் தத்துவத்தில் நம்பிக்கை பூர்ண ஈடுபாடு போன்றவை இருக்க வேண்டும்.

பக்தி என்பது இறைவன் அல்லது இஷ்ட தெய்வம் அல்லது குருவின் மீது கொண்டிருக்கும் ஆழ்ந்த அன்பு எனப்படும். பயபக்தி என்றால் இறைவன் அல்லது குரு மீது சிறிது அச்சம் கலந்த பக்தி ஆகும். அதாவது குருவின் உபதேசத்தில் தவறாக ஏதும் செய்துவிடக் கூடாதே, இறைவன் அல்லது குருவின் அதிருப்திக்கு ஆளாகிவிடக்கூடாதே என்று நம் மனதில் எண்ணுவது பயம் கலந்த பக்தி அதாவது பயபக்தி ஆகும்.

விசுவாசம் என்றால் ஆழ்ந்த நம்பிக்கை. "எனக்கு இஷ்டதெய்வம் முருகன் அல்லது ராமன், கிருஷ்ணன், சிவன், ஐயப்பன் என்று ஏதாவது ஒரு தெய்வத்தை வணங்குவது ஆகும். நான் கும்பிடுவது என்னோட இஷ்ட தெய்வம் மட்டும்தான். என்னோட எல்லா நல்லது கெட்டதுக்கும் அவனே பொறுப்பு. அவனின்றி எனக்கு வேறு கதியில்லை" என்று அந்த தெய்வத்திடம் பூர்ண சரணாகதி அடைவது ஆகும். அதே போல குருவிடம் கொள்ளும் நம்பிக்கை ஆகும். "எனது குரு சொல்லி விட்டால் அதற்குப்பின் எனக்கு வேறு வேதவாக்கு இல்லை" என்று குருவை முழுமையாக நம்பி சரணாகதி அடைவது ஆகும்.

நமக்காகவும் நம் நலனுக்காகவும் நமது மனம் நிம்மதியாக இருக்க வேண்டும். நோய் நீங்கி, மனத்தில் பயமும் இல்லாமல் எப்போதும் சந்தோசமாக இருக்க வேண்டும். இறைவனை கண்டு நிலையான ஆனந்தத்தை அடையவும் ஆன்மீக உலகத்தையும் நிம்மதியான மனதையும் அடைவதற்கும் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் நமக்கு ஒரு செய்தி கூறியிருக்கிறார். இதற்கு ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சீடர்களே ஒரு எடுத்துக்காட்டாக இன்றும் விளங்குகிறார்கள்.

மனிதனைத் தவிர மற்ற உயிரினங்களுக்கு மனிதனைப்போல் மனம் என்பது இல்லை. அதனால்தான் மனம் உள்ளதால்தான் மனிதன் என்று அழைக்கப்படுகிறான் மனிதனுக்கு எண்ணிக்கையற்ற எண்ணங்கள் உதயமாவதற்கு இருப்பிடமாக இருப்பது நம் கண்ணுக்குத் தெரியாததும், அவரவர்களால் மட்டும் உணரக்கூடியதும் மனது ஆகும். இதனை கிரேக்க தத்துவ ஞானி சாக்ரடீஸ் 'உன்னையே நீ அறிவாய்' என்று கூறியது அவரவர் மனதினைத்தான் அவர் கேட்கும்படி சொல்லியிருக்கிறார்.

33

நீ நல்லவனா கெட்டவனா என்பதை பற்றி மற்றவர்கள் உன்னிடம் கூற வேண்டிய அவசியம் இல்லை. உன்னைப்பற்றி அதாவது நல்லவனா கெட்டவனா என்பது பற்றி உன்னோட மனதிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். இதனைத்தான் உலகில் பேச்சு வழக்கில் அதனை மனசாட்சி என்று அழைக்கிறோம். மனம் மாசு இல்லாமல் இருக்க வேண்டும், மாசு இல்லாத மனமே மன ஒழுக்கம் எனப்படும். ஒழுக்கம் என்பது மனதில் நல்ல எண்ணங்களுடன் இருந்து, மனதளவில்கூட யாருக்கும் கெடுதல் செய்வதற்கு இடம் தராமல் தூய்மையுடன் இருத்தல் ஆகும்..

சிலபேர் உதட்டளவில் ஒருவரை வாழ்த்தி

விட்டு தங்களை நல்லவர்கள்போல் அவர்களிடம் வெளிப்படையாகக் காட்டிக்கொள்வார்கள். ஆனால் தங்களது உள்ளத்தில் பொறாமைத் தீயை தங்களையும் அறியாமல் அவர்கள் மீது வளர்த்துக் கொள்வார்கள். இந்த தன்மையானது ஒருவர் தீய செயல்களை மற்றவர்களுக்கு செய்வதைவிட மோசமான தன்மையாகும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இதனைத்தான் வடலூர் வள்ளலார் ‘உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவோர் உறவு கலவாமை வேண்டும்’ என்று இறைவனிடம் வேண்டுகிறார்.

இன்னா செய்தாருக்கும் இனியவை செய்யும் குணத்தினை நமது மனதில் வளர்த்துக்கொள்ள வேண்டும். மனிதனுடைய மனம் பகைவனுக்கு அருள்வாய் என்ற மனநிலையில் பக்குவப்பட்ட நிலையில் அவன் மனமும் செயல்பாடுகளும் இருக்க வேண்டும். இத்தகைய மன ஒழுக்கத்தைக் கடைபிடிப்பதற்கு ஆன்மீகம்தான் நமக்கு வழி காட்டுகிறது. அவ்வாறு வாழ்வில் மன ஒழுக்கத்தினை நாம் கடைபிடிக்கும்போது நாம் தேடும் விரும்பும் மன அமைதி நம்மையும் அறியாமல் நம்மைத் தேடி வரும்.

நம்மை யாரும் கவனித்தாலும் கவனிக்காமல் இருந்தாலும் நமது செயல்பாடுகளும் எண்ணங்களும் தூய்மையாக இருக்கும்படி வைத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு இருப்பதைத்தான் ஒழுக்கம் என்ற தூய்மையான சொல்லை சான்றோர்கள் பயன்படுத்தினார்கள். நமது கண், காது. மூக்கு, வாய், மெய் என்ற ஐம்புலங்களுக்கு இந்திரியங்கள் என்று பெயர். நமது இந்திரியங்கள் மூலம் பிறருக்குத் துயரம் அளிக்காமல் வாழ்வில் நல்ல நடைமுறைகளைக் கடைபிடிக்கும் முறையைத்தான் இந்திரிய ஒழுக்கம் என்று சாஸ்திரங்கள் இதிகாசங்கள் புராணங்கள் போன்றவைகள் கூறுகின்றன. உலகில் நல்லவைகளும் தீயவைகளும் கலந்தே காணப்படுகின்றன.

ஐம்புலன்களில் ஒன்றான கண் என்ற இந்திரியத்தால் நல்லவைகளை, நன்மை தரக்கூடிய காட்சிகள் செயல்பாடுகளை மட்டும் பார்க்க வேண்டும். எடுத்துக்காட்டாக நாம் தினந்தோறும் பார்க்கும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை எடுத்துக் கொள்வோம். தொலைக்காட்சிகளில் வியாபார நோக்கில் பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளை காட்டுகிறார்கள். நாம் அனைத்தையும் பார்க்காமல் நமது வாழ்க்கைக்குத் தேவையானவைகளை, நன்மை தரக்கூடிய நிகழ்ச்சிகளை மட்டும் தேர்ந்தெடுத்து பார்க்க வேண்டும். அதாவது மனதளவில்கூட பாதிப்பு ஏற்படுத்தாத நிகழ்ச்சிகளை மட்டும் தேர்ந்தெடுத்து பார்க்க வேண்டும். நமது வாழ்க்கைக்குத் தேவையான மன அமைதி தரக்கூடிய நன்மை தரக்கூடிய நிகழ்ச்சிகளை மட்டும் பார்ப்பதற்கு நமது மனதிற்கு, கட்டளையிட வேண்டும்.




உலகில் பொதுவாக கண்கள் வழியேதான் காட்சிகளெல்லாம் மனதிற்குள் சென்று செயல் வடிவங்கள் பெறுகின்றன. அதாவது மனதில் காட்சிகள் பதிவாகி அவை செயல் வடிவம் பெறுகின்றன. நன்மை தரக்கூடிய நிகழ்ச்சிகளை தேர்வு செய்து அவற்றைப் பார்ப்பதால் மட்டும் மனித மனம் நல்லவைகளை பதிவு செய்கிறது. அதனால் நமது எண்ணங்களும் செயல்பாடுகளும் நல்லவையாக இருப்பதைக் காணலாம். நாம் மனதிற்கு நல்லவைகளை மட்டும் பார் என்று கட்டளையிட்டு விட்டால், நமது மனம் அறிவின் வழியாக அதனை தெரிவித்து விடும்.

தற்போது தொலைக்காட்சி தொடர்களில் வரும் நாடகங்களைப் பார்ப்பதால் பெரும்பாலான மக்கள் மன அழுத்தம் போன்ற நோய்களால் பாதிக்கப்படுகிறார்கள் என்று ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளார்கள். தற்போதைய தொலைக்காட்சி நாடகங்களில் வரக்கூடிய கதாபாத்திரங்கள் பேசும் வசனங்கள் பெரும்பாலும் வீட்டில் தீமை தரக்கூடிய அதிர்வலைகளையும் ஏற்படுத்திக் கொண்டு இருக்கிறது என்றும் கண்டுபிடித்துள்ளனர். அத்தகைய தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்க்கும் கேட்கும் குழந்தைகள் மனம் என்ன நிலைக்கு மாறும் என்பதை பெற்றோர்கள்தான் சிந்தித்து செயல்பட வேண்டும். குழந்தைகளின் நலனுக்காக இதுபோன்ற தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தொடர்களை எல்லாம் பார்ப்பதைத் தவிர்க்கும்படி

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு மட்டுமல்ல தங்கள் ஆழ்மனதிற்கும் கட்டளையிடுங்கள்.

உலகில் பொதுவாக வாழ்க்கைக்கு நம்பிக்கையூட்டக்கூடிய நேர்மறையான வார்த்தைகள், மனதுக்கு இனிமை தரக்கூடிய மெல்லிசை பாடல்கள் நம் செவியில் ஏதோவொரு நேரத்தில் விழுந்து கொண்டுதான் இருக்கின்றன. அதேபோல் நமது வாழ்க்கைக்குத் தேவையற்ற நம்பிக்கையற்ற நம் மனதிற்கு துன்பம் தரக்கூடிய வன்மையான வார்த்தைகளும் மனதை சீர்குலைக்கும் பேரிரைச்சல்கள் கூடிய வெறுப்படையும் மேற்கத்திய இசைகள் கலந்தும் நம் செவியில் விழுந்து கொண்டுதான் இருக்கின்றன.

ஐம்புலன்களில் ஒன்றான செவி என்ற இந்திரியத்தால் வாழ்க்கைக்குத் தேவையான ஆன்மீக விஷயங்களையும் நம்பிக்கை தரக்கூடிய ஆன்மீக அன்பர்களின் சாதுக்களின் தத்துவ வார்த்தைகளையும் கேட்க வேண்டும். மேலும் மனதிற்கு இதம் தரும் அமைதியைத் தரக்கூடிய பக்திப் பாடல்கள் இசை போன்றவற்றினை மட்டும் நம் செவிகள் மூலம் கேட்க வேண்டும். நமது மனம் விரும்பாத தேவையற்ற வார்த்தைகள், மன அமைதியை சீர்குலைக்கும் இரைச்சல் தரக்கூடிய பாடல்கள் போன்றவற்றை நமது செவியில் கேட்பதை முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும். அப்படிப்பட்ட தேவையற்றவைகளைக் கேட்கும் சூழ்நிலையில் நாம் இருந்தால், நாம் அவ்விடத்தில் இருந்து தயக்கமில்லாமல் விலகிச் சென்று விடுவது நல்லது.

உலகில் நல்லவைகளும் தீயவைகளும் கலந்துதான் காணப்படுகிறது. எனவே ஐம்புலன்களில் ஒன்றான நாசி என்ற இந்திரியத்தால் மனதிற்கு உகந்த நறுமணங்களை மட்டும் நுகர வேண்டும். நறுமணம் மிக்க மலர் கூட்டத்தின் நடுவில் நாம் இருக்கும்போது மனம் அமைதி நிலையில் ஒருவிதமான இன்பத்தினை உணரலாம். துர்நாற்றம் அருகில் நாம் சென்றாலே மனம் வெறுப்பின் நிலைக்கு செல்வதோடு உடலின் ஆரோக்கிய நிலையும் பாதிக்கப்படும். வீட்டில் பல்வேறு வாசனைப் பொருள்களை பூஜையறையில் வைத்திருந்தால், வீட்டில் ஒரு தெய்வீக தன்மை இருக்கும் என்று சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளது.

நாம் ஐம்புலன்களில் ஒன்றான வாய் என்ற இந்திரியத்தால் வாழ்க்கைக்குத் தேவையான இனிமை தரக்கூடிய வார்த்தைகள் மட்டும் பேச வேண்டும். நாம் எந்த சூழ்நிலையில் பேசினாலும்



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

மற்றவர்கள் மனம் புண்படாதபடி பேசிப் பழகவேண்டும். நல்லவைகளையே, உலகிற்குப் பயன்தரக்கூடிய செயல்பாடுகளைத் தரக்கூடிய இனிமையான வார்த்தைகளை நண்பர்கள் உறவினர்கள் போன்ற மற்றவர்களிடம் பேசிப் பழகுதல் வேண்டும். நாம் மற்றவர்களிடம் பேசும்போது அவர்கள் மனம் புண்படும்படி வருந்தும்படியான வார்த்தைகளை மறந்தும் பேசிவிடக்கூடாது.

நமது வாழ்வில் உண்மையே பேச வேண்டும். உண்மையே பேசுவதால் என்ன பயன் என்று கேட்பவர்கள் ஹரிச்சந்திரன் வரலாற்றினை படித்துப் பாருங்கள். அவன் நாடு நகரம் மனைவி மக்களையும் இழந்தபோதும் அவன் உண்மையே பேசினான். நமது இதிகாசங்கள் புராணங்களிலும் உண்மையே பேச வேண்டும் என்று வலியுறுத்திக் கூறுகின்றன.

மகாத்மாகாந்தியிடம் மூன்று குரங்குப் பொம்மைகள் இருந்தன. ஒரு குரங்குப் பொம்மை வாயினைப் பொத்திக்கொண்டு இருக்கும். மற்றொரு குரங்குப்பொம்மை கண்களைப் பொத்திகொண்டு இருக்கும் மூன்றாவது குரங்குப்பொம்மை காதுகளைப் பொத்திக்கொண்டு இருக்கும். மூன்று பொம்மைகள் நமக்கு உணர்த்தும் நீதி என்ன என்றால் தீயவைகளைக் பார்க்காதே, கேட்காதே பேசாதே என்பதை தனித்தனியாக மௌனமாக நமக்கு உணர்த்துகிறது. வாழ்க்கையில் நாம் அனைவரும் இந்த நீதிமுறையை தவறாமல் கடைப்பிடித்து வர வேண்டும். அவ்வாறு பின்பற்றினாலே நமது மனம் ஓரளவுக்கு அமைதியடையும்.

சமாதானம் என்பது ஆன்மீக வழியில் நமது அலைபாயும் மனதை ஒருமுகப்படுத்துதல் என்று பொருள்படும். நமது மனதை தொடர்ந்து ஒரு உயர்ந்த பொருளில் லட்சியத்தில் வைத்திருக்கும் சக்திக்கு சமாதானம் எனப்படும். உலக பேச்சு வழக்கில் சமாதானம் என்றால் சண்டை சச்சரவு செய்பவர்களிடம் பேசிக் கலந்து தீர்வு செய்வதற்கு சமாதானம் என்று கூறுவோம். ஆனால் ஆன்மீகத்தில் எந்த ஒரு பொருளில் நமது மனம் ஒருமுகப்படுத்தப்படுகிறதோ அந்த ஒருமுகப்படுத்தும் நிலையையே சமாதானம் என்று கூறுகிறது. .

**எழுத்தாளர்பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd)
கைபேசி: 9894043308

**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

# மொபைலில் ஆன்மிகமலரை முழுவதும் படிக்க

# Google Play Store **aanmeegamalar** டவுன்லோடு செய்து




நேரடி மற்றும் மறைமுக கட்டணங்கள் எதுமில்லை

# இதழ் முழுவதும் இலவசமாக படிக்கலாம்...

GET IT ON Google Play